www.tamilarangam.net

படம்:

# நாட்டாண்மை

பள்ளம்
ஓசை
அம்மா
எக்ஸில்
உயிர்நிழல்
et
சரிநிகர்
காலக்குறி

பாடல்: அக்கடான்னு நாங்க --- போட்டா
துக்கடான்னு நீங்க தடைபோட்டா
தடா
அதுக்குத்தடா.

வெள்ளி விழா இலக்கியச்சந்திப்பையொட்டி வெளிவருகிறது.1999.மே- தொடர்புகட்கு: எஸ்.வி.ர:.பேல்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஷோபாசக்தி

மாற்றுக்கருத்துக்களுக்கு களங்கள் அமைத்துக் கொடுப்பதற்காக உயிரையும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்... உயிரைக் கொடுத்தும் விட்டோம் எனக் கருத்துப்பேசும் இதழாசிரியைகளாலும் / இதழாசிரியர்களாலும் நிராகரிக்கப்பட்டதாய் அறியப்படும் பிரதிகளின் தொகுப்பிது.

ஒரு பிரதியை நிராகரிப்பதற்காய் தனிநபர் தாக்குதல் என்பதில் தொட்டு திரிபு , நீளம், சுருக்கம், தருக்கம், அநாகரீக எழுத்து, அனார்க்கிஸ எழுத்து, தன்னார்வக் குழுக்கள், தத்துவார்த்த வழுக்கள் என்பதுவரை ஏகப்பட் காரணங்களை இதழாசிரியைகளும் / இதழாசிரியர்களும் கைவசம் வைத்திருக்கலாம்.

ஆனால் ஒரு பிரதிக்குப் பல வாசிப்புக்கள் சாத்தியமாய் இருக்கையில் தமது ஒற்றை வாசிப்புக்களுக்கூடாகவே பிரதிகளை மின்கம்பங்களில் கட்டிவிடும் இவர்கள் பிரதிகளைத்தட்டிக் கழிப்பதும் வெட்டித்தள்ளுவதும் "கிளைமாக்ஸில்`` பிரதிகளையே "டம்ப்" பண்ணிவிடுவதும் நல்லதுக்கில்லை.

எந்த அதிகாரத்தின் பெயரால் இந்தப் பிரதிகள் இவர்களால் ஒதுக்கப்பட்டன? ஒழிக்கப்பட்டன? கழிக்கப்பட்டன? இல்ல.. தெரியாமற்தான் கேட்கிறோம்.

இத்தொகுப்பில் இடம்பெறும் உயிர்த்தெழுந்த பிரதிகள் சிலவற்றில் எங்களுக்குத் துப்பரவாய் உடன்பாடு கிடையாது. எனினும் இவற்றை ஒதுக்கித்தள்ளவோ, தணிக்கைசெய்யவோ எந்தவிதமான அதிகாரமும் எங்களுக்குக் கிடையாது. வேறெந்தக் கொம்பனுக்கும் கிடையாது கொம்பிக்கும் கிடையாது.

விமர்சனங்களை எதிர்கொண்டு, அவற்றுக்கான மறு விமர்சனங்களை வைப்பதன் மூலமாகத்தானே ஏதாவது வெட்டிப் புடுங்கலாம்! இல்லையா?

இந்தப் பிரதிகள்மீது நல்லது, கெட்டது, புரட்சி, எதிர்ப்புரட்சி, ஏப்பை, சாப்பை, சப்பு, சவர் போன்ற எந்தவித அளவுகோல்களையும் நாங்கள் வைத்துப்பார்க்கவில்லை.

இவை "மற்ற" மனிதரின் கருத்துக்கள், ஒதுக்கப்பட்ட பிரதிகள்... தட்ஸ் ஓல்.

இந்த இதழாளர்களின் நாட்டாமை மையங்களுக்கு எதிராய் இதுபோன்ற "நட்டாமுட்டி" முயற்சிகளை நாங்கள் தொடர்வதைத்தவிர எங்களுக்கு வேறு வழி ஏதுமுண்டோ?

எங்களின் வழி தனி... வழி! தடுக்காதே!!

ஷோபாசக்தி
*15 . 5 .99*

www.tamilarangam.net

# சேனன் VS சேரன் IN பரிஸ்

சேனன்

*எதிர்கால மனிதருக்கு உங்களைப்பற்றி என்னசொல்ல விரும்புகிறீர்கள்?*
மனிதருக்கு...ஏற்கனவே என்னால் சொல்லப்பட்டவார்த்தைகளைவிட நான் இனிசொல்லப்போகிற வார்த்தைகள் எல்லாம் சேர்த்துப்பாத்தால் என்னுடைய அனுபவங்கள் என்னுடைய சிந்தனைகள் என்னுடைய படைப்புக்கள் அதற்குள்ளால் வந்திருக்கு. அந்த விசயங்கள் ஏதோ ஒருவடிவத்தில் எதிர்கால மனிதருக்கு போய்ச்சேரும். உங்கட அந்தக்கேள்விக்கு இதைவிடக்குறிப்பா எனக்கு ஒன்றும் சொல்றதுக்கு இல்ல.

*நீங்கள் எவ்வளவு காலமாக வைரமுத்து, மேத்தா, சுரதா ரசிகராக இருக்கிறீர்கள்?*
(சிரிப்புடன்) ஒரு காலமும் அவர்கள் ரசிகராக இருந்ததில்லை.

*அதற்கு என்னகாரணம்? அவர்கள் கவிதை எழுதவில்லையா?*
அவர்கள் கவிதை எழுதினார்களா இல்லையா என்பதல்ல பிரச்சினை. கவிதை அல்லது இலக்கியம் தொடர்பாக என்ரபரிட்சயமும் என்ர புரிந்துணர்வும், என்னுடைய பயிற்சி தேர்ச்சியான விடயங்கள், அவர்கள் எழுதுவதுபோன்ற கவிதைகளுக்கும் அந்தப்பாரம்பரியத்துக்கும் வெளியால்தான் இருந்தது. ஆகவே அவர்கள் எழுதுவது ஒரு சீரிய அல்லது புத்தெழுச்சிமிக்க அல்லது என்னைப் பாதிக்கக்கூடியதாக இருக்கவில்லை.

*உங்கட கவிதைப்போக்கென்று ஒரு போக்கிருக்கு. உங்கட கவிதைக்கென்றொரு பாரம்பரியம் இருக்கு என்று சொல்லவருகிறீர்களா?*
இல்லை. என்ர கவிதைப்போக்கென்று என்றொரு... எனக்கென்றொரு கவிதைமுறை கவிதைப்பாணி இருக்கு அதுவும் எல்லா நேரமும் ஒரு மாதிரியில்லை. ஆனால் ஈழத்தில இருந்து கவிதை எழுதிக்கொண்டு வாற ஆக்களுக்கு ஒருவகையான பாரம்பரியம் இருக்கு. ஒரு வித்தியாசமான கவிதைப்பாரம்பரியம் இருக்கு. அதுதான் தனிப்பாரம்பரியம் என்றில்லை. வேறயும் பல போக்குகள் இருந்தது. ஆனால் ஒரு ஆட்சிமிக்க பாரம்பரியம் ஒன்றிருக்கு. அது தமிழ்நாட்டிலிருந்த பாரம்பரியத்திலிருந்து வித்தியாசமானது.

*தமிழ்நாட்டுக் கவிதைப் பாரம்பரியத்துக்கும் ஈழத்துக் கவிதைப் பாரம்பரியத்துக்குமான வித்தியாசமாகத்தான் இதைப்பார்க்கிறீர்கள்?*
ஒருவகையில் அது உண்மை. அதேநேரம் அது தனிப்பட்ட ஆளுமைகள் சம்மந்தப்பட்ட விசயமும்தான்.

*நீங்கள் ஏன் கவிதை எழுதக்கூடாது?*
இது ஒரு சுவாரசியமான கேள்வி...
நான் கவிதை எழுதுவதை நிப்பாட்டலாம் என்றுதான் யோசிச்சுக்கொண்டிருக்கிறன். நீங்கள் இப்படிக்கேக்கிறீர்கள். (சிரிப்பு)

www.tamilarangam.net

*கவிதை எழுதுவதை நிப்பாட்டலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறீர்கள்.?*
கவிதையை விட்டுவிட்டு வேற உரைநடை அல்லது நாவல் அல்லது வேற வேற விசயங்களைப்பற்றி எழுதுவதப்பற்றித்தான் யோசித்துக்கொண்டிருக்கிறேன்.

*களைத்துப்போனீர்களா?*
ஒவ்வோரொவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வோரொவ்வொரு உங்களுடைய ஆர்வம் ஈடுபாடு சம்பந்தமாக வேறுவேறு மாற்றங்கள் ஈடுபாடுகள் வரும். இதில் களைப்பு என்ற சொல்லுக்கு இடமில்லை.

*இந்தக்கேள்வி உங்களை பணத்தோடு சம்மந்தப்படுத்தி பார்க்கும் முயற்சியில்லை. இது ஒரு பொதுவான கேள்வி. பணவசதி எவ்வளவு தூரம் கவிதை எழுத இலகுவானது?*
இதைப்பற்றி எனக்குத்தெரியாது. ஏனென்று சொன்னால் தமிழ்பாரம்பரிய கருத்தொன்று இருக்கு. லக்சுமியும் சரஸ்வதியும் ஒன்றாய்ச் சேர்ந்திருக்கிறேல்ல எண்டு. அப்பிடி அது எவ்வளவுதூரம் உண்மை என்பது கேள்விக்கிடமானது. ஏனென்று சொன்னால் நீங்கள் உங்களைச் சுற்றியிருக்கிற உதாரணங்களையே பார்க்கலாம். சில நல்ல படைப்பாளர்கள் உலகத்திலேயே மிகமுக்கியமான நல்ல படைப்பாளர்கள் நல்ல வசதியுள்ளவர்களாகத்தான் இருந்திருக்கினம். நீங்கள் ரவீந்திரநாத்தாகூரை எடுத்தக்கொண்டீர்கள் என்றாலும் சரிதான் கெமிங்வேயோ ஹைசேயோ நிறையப்பேரை எடுத்தீங்களெண்டா எல்லோரும் வந்து நல்லவசதியுள்ள ஆக்களாத்தான் இருந்திருக்கினம். அதேநேரம் எந்தவிதமான வசதியில்லாமலும் நல்ல எழுத்தாளர்கள் இருந்திருக்கினம். எல்லா இடத்துக்கும் எல்லாக் காலத்துக்கும் பொருந்தக்கூடிய மாதிரியான ஒரு முடிவாக வந்து இதைப்பாக்கேலாது. அப்பிடிப்பாக்கிறது எங்கட சமூக அரசியல் வரலாற்று உணர்வுகளை கொச்சைப்படுத்திற மாதிரித்தான் இருக்கும்.

*உங்களது இலக்கியக் கத்தலை கவனித்த முதல்மனிதர் யார்? இலக்கியக் கத்தல் என்று கேட்பதற்குக்காரணம் அரசியலும் சம்பந்தப்பட்ட மனிதர் என்பதால்.*
நான் சின்னவயசிலேயே எழுத வாசிக்கத்தொடங்கீட்டன். உண்மையில என்ர முதலாவது பிரசுரமான இலக்கியப்படைப்பு நான் 8 வயசாயிருக்கேக்க அது பள்ளிக்கூடத்து மலரில வந்திருக்கு. ஆனா நான் எத்தினையாம் வகுப்பெண்டு அந்த ஆசிரியர் அதில போடேல்ல. அதுக்குப்பிறகு, ஒண்டு வீட்டுச்சூழல், ரெண்டாவது பாடசாலைச்சூழல், பிறகு நண்பர்கள், பிறகு அப்பாவினுடைய நண்பர்கள். சின்னவயசிலிருந்து எங்களுக்கொரு சுற்றிவர இலக்கியப்பாதிப்புக்கள் ஏற்படுவதற்கான தொடர்ச்சியாக இருந்து வந்துகொண்டிருந்தது. உதாரணமாக சின்னனில அப்பாவின்ர கவிதையள் எல்லாம் பாடமாக்கி நான் கவியரங்கங்களில செய்யவேண்டியிருந்தது. பத்து பதினொருவயசில இருந்த அப்பாவின்ர கவிதையள் எல்லாம் எனக்குப்பாடம். அப்ப அப்பான்ர நண்பர்கள் யாரும் வந்தாலும் நாங்கள் எழுதின கவிதையை ஒருக்கால் சொல்லச்சொன்னால் நாங்கள் அவற்றை முழுக்கவிதையையும் அப்பிடியே சொல்றது. மற்றது பள்ளிக்கூடத்தில படிக்கேக்க தமிழ், சமய தேவாரங்களெல்லாம் வீட்டுக்குள்ளயே பாடமாக்கிக்கொள்றது. அப்ப ஓசை, சந்தம் இந்தமாதிரி விசயங்கள் தொடர்ச்சியா இந்தப்பின்னணியில வருது. அதோட இன்னொரு விடயமொன்று. சின்னவயசிலேயே வாசிக்கத்தொடங்கியாச்சு. நான் எழுத்துக்கூட்டி வாசிக்கத் தொடங்கேக்கயே சுதந்திரன் வாசிக்கத் தொடங்கீட்டன். அப்ப அதில இருந்து கிட்டத்தட்ட 7ம் 8ம் வகுப்பு படிக்கேக்கயே சாதாரணமா இந்த கல்கி, சாண்டில்யன், காண்டேகர், மு.வ. எல்லாத்தையும் தள்ளிப்போட்டுவிட்டு ஜானகிராமன் அல்லது அசோகமித்திரன் அல்லது டானியல் இந்த விசயங்களுக்கு வந்தாச்சு. ஓ.எல். எடுக்கிற காலத்தில 9ம் 10ம் வகுப்பிலேயே முற்று முழுதான ஒரு இலக்கியத்துக்கு வந்தாச்சு. ஓ.எல். தமிழ் பாடத்தில எக்ஸாமுக்கு சமகால தமிழ் இலக்கியம் பற்றித்தான் கட்டுரை எழுதினனான். அந்தக்கேள்வி அங்க இருந்தது. அப்ப எழுதேக்க மகாகவி, நீல வாணனில இருந்து எல்லாரையும் கோட் பண்ணித்தான் எழுதினது. அதிஸ்டவசமா அந்தப்பேப்பர் திருத்தினது நீலவாணன். அப்ப அவர் ஓ.எல். எக்ஸர்மினரா மட்டக்களப்பில இருந்தவர். அப்ப அவருக்கு அது என்ர பேப்பர் எண்டு தெரியாது. பாத்திட்டு இப்பிடி எழுதிறான் எண்ட யோசிச்சிட்டு இவனும் அங்கதானே படிக்கிறான் இவன்ர பேப்பரா இருக்குமோண்டு பிறகு அவர் செக்பண்ணிப் பார்த்தார். அது என்ர பேப்பர்தான். இது ஒரு தனிப்பட்ட விசயம் தான். இத வந்து ஒரு பின்னணிக்குத்தான் தாறன். அந்த ?நசமைனல நிறை இலக்கியமெல்லாம் வந்தாச்சு. அந்த நேரமே என்னைக்கேட்டீங்க எண்டா - அப்ப வைரமுத்து அதுக்குள்ள வரேல்ல சரிதானே - அவையளைப்பற்றி இந்தமாதிரி கருத்துக்கள்தான் சொல்லியருப்பன். ஏனெண்டா முற்றுமுழுதா வித்தியாசம் எண்டு சொல்லியென்ன. அப்ப அந்த **period** ல ஈழத்துக்கவிதையளில அவ்வளவுபேற்ற நிறையக்கவிதையள் எனக்கு இந்தமாதிரிப்பாடம். இந்த வகையில வித்தியாசம் இருந்தது. என்ர தனிப்பட்ட இலக்கியப்பாரம்பரியம் இப்பிடித்தான் இருந்தது. சுருக்கமாச்சொன்னா என்ர இலக்கியத்தை உருவமைச்சது ஒண்டு என்ர சுற்றுச்சூழல் இரண்டாவது தீவிர வாசகனா இருந்தது. அத தொடர்ச்சியா கெண்டினியூ பண்றன். இண்டை வரைக்கும் தீவிர வாசகனாத்தான் இருக்கிறன்.

*"கவிஞர் சேரன்" உருவாகினதுக்கு அரசியற் பங்களிப்பும் முக்கியமா இருக்குமோ?*
உங்கட கேள்வியில இருக்கிற முரண்பாட்டை சுட்டிக்காட்டவேண்டும். என்ன கொஞ்சநேரத்துக்கு முந்தி கேக்கிறீங்கள் நீங்கள் ஏன் கவிதை எழுதக்கூடாது என்று (சிரிப்பு). இப்ப சொல்கிறீர்கள் நீங்கள் ஏன் கவிஞர் என்று சரிதானே? .. என்ன வித்தியாசம் இருக்கெண்டு சொன்னால் 70க்குப்பிறகு 78 *period* ல தீவர அரசியலையும் கவிதையையும் ஒரு இலக்கியத்தின்ர சீரிய தன்மை இலக்கியத்தின்ர உண்மையளவு அம்சங்கள். இலக்கியத்தின்ர அந்த முக்கியமான குணாம்சங்களை தவிர்க்காமலே அரசில்ல அதுக்குள்ளால சொல்லமுடியுமா என்று நாங்கள் அதில முயற்சி செய்தனாங்கள். அதில ஒரு கணிசமான அளவுக்கு அந்த ஒரு வெற்றி வந்திருக்கு போல இருக்கு. ஏனெண்டா கட்டாயமா நல்ல அரசியலைச்சொல்றது நல்ல கவிதையா இருக்கோணுமெண்டில்ல. நல்ல கவிதையா இருக்கிறது நல்ல அரசியலைச் சொல்லவேணுமெண்டில்ல. அதே நேரம் வந்து நல்ல கவிதையா இருக்கிறது நிச்சயமா தீவிர அரசியலபேசோணும் எண்டும் எதிர்பார்க்கேலாது. தீவிர அரசியலப்பேசிறவர்கள் எல்லாரும் நல்லகவிதை எழுதோணும் எண்டில்ல சரிதானே. அப்ப இந்த ரெண்டையும் ஒரு சேர்க்கை. சினேகபூர்வமான சேர்க்கையை ஓரளவுக்கு செய்யமுடிந்தது என்பதுதான் ஒரு திருப்பம். அதுதான் அரசியல் கவிதைக்கு

www.tamilarangam.net

இலக்கியத்தையும் அரசியலையும் இன்னொரு தளத்துக்கு கொண்டு போனதில இந்த கவிதைகள் ஒரு முக்கியமான மாற்றத்தை கொண்டு வந்திருக்கெண்டு நான் நினைக்கிறன். அப்ப என்னில ஏற்பட்ட இந்த மாற்றம் இதுதான். மற்றது முந்தி இருந்தாக்கள் அரசியல் எழுதியிருக்கினம். ஆனா அவைக்கு நேரடியான அரசியலோட சம்மந்தம் இல்லை. உதாரணத்தோட விளக்கிறன். நீங்கள் யுத்தம் பற்றி கவிதை எழுதலாம். யுத்தம் எப்பிடி பாதிக்கும்? யுத்தம் ஏன் என்று பொதுவா ஒரு கவிதை எழுதலாம். அது ஒரு தரப்பாடு. அதேநேரம் ரஜனி திரணகமவை புலி சுடுது அல்லது சபாலிங்கத்தை புலி சுடுது. அப்ப அதைப்பற்றி அதால உங்களுக்கு சரியான கோபம் வந்து அதுபற்றி நேரடியான ஒரு படைப்பை எழுதேக்க அதவந்து பொதுவான ஒரு அரசியலில இருந்து குறிப்பான சில விசயங்களிலயும் அதுபோகுது. அதுதான் நேரடி அரசியல். புரொண்டல் அசால்ட் என்ன அந்தமாதிரி நேரடியான விசயங்களை அப்பிடி எழுதிற ஒரு போக்கில இருந்துதான் நான் வாறன். அதமுந்தி வேறவேற ஆக்கள் வேறவேற தளங்களில செய்திருக்கக்கூடும். ஆனால் இந்தமாதிரி பயங்கரம் நிலவிய சூழலில கனக்கப்பேர் செய்யேல்ல. அது முதல்ல இலங்கை அரசாங்கம் தொடர்பாயிருந்தது. பிறகு எங்களுடைய இயக்கம் தொடர்பா மாறியிருக்கு..அப்ப அது ஒரு வித்தியாசம். நீங்கள் தப்பேலாது. நீங்கள் நேர கொன்:.பொரன்ற் பண்றீங்கள்.

*தற்பொழுது உங்கள் இயக்கம்?*
எனக்கு ஒரு இயக்கமும் இல்ல (சிரிப்பு) படைப்பியக்கம் - படைப்பியக்கமும் படை'ப்பிலக்கியமும்தான் என்ர இயக்கம்.

*எங்காவது பேசாத கவிஞன் பிரளயமாகி இருக்கிறானா?*
நீங்கள் எனது கவிதையைத்தானே கோட் பண்ணுறீங்க. நீங்கள் வரலாற்று உதாரணம் கேட்டால் கனக்க உதாரணம் சொல்லலாம். உதாரணமா ருஷ்ய போராட்ட காலத்தில அந்த நேரத்தில ஸ்ராலினுக்கு கீழ இருந்த காலத்தில நிறையப்பேருக்கு அந்தநேரத்தில வந்த ஒண்டும் செய்யமுடியேல்ல. ஆனா அதுக்குப்பிறகுதான் அவையின்ர முழுவிசயமும் வெளியில வருது. அந்த நேரம் பேசியிருக்கவேணும் எண்டு சொன்னா ஒரு கவிதை எழுதிப்போட்டு உள்ளுக்க போயிருக்கவேணும். சண்டை பிடிச்சிருக்கலாம். அப்ப அந்த வரிகளை வெறும் வரிகளா நீங்கள் எடுக்கக்கூடாது. அது வந்து உருவகம். சில சில காரணங்களுக்காக தங்களுக்குள் உள்வாங்கியிருக்கிறார்கள். அல்லது அந்த இடத்தைவிட்டு எங்கயும் தப்பிப்போய் இருக்கிறார்கள். அந்த ஆத்திரத்தை கோவத்தை பேணி பிறகு மிக உன்னதமான கவிதைகளை இலக்கியங்களை படைக்கலாம். அதைத்தான் அதில சுட்டிக்காட்டிறன் என்ன? இப்ப இவ்வளவு அறியாயம் நடக்குது. உடனடியா திடீரென்று நல்ல இலக்கியம் வரேல்ல என்று சிலபேர் சொல்லுகினம்தானே. இப்ப நீங்க பாத்திருப்பீங்க தமிழ்நாட்டில ஜெயமோகன் அல்லது .... அப்ப நாங்க உடனடியா சில விசயத்தை எதிர்பார்க்கேலாது என்ன? சரிதானே! அதே நேரம் இன்னுமொரு தீவிரமான ஆழமான இதுவும் இருக்கு. உடனடியா ஒரு விசயத்தை நீங்க சொல்லவரேக்க வாற எபெக்ற் அதனுடைய இலக்கியப்பாதிப்பு எப்பிடி இருக்கு அந்த விசயத்தை உள்வாங்கி கொஞ்சகாலத்துக்குப் பிறகு சொல்லேக்க அதின்டபாதிப்பு எப்பிடி இருக்கு? என்ன?

*அப்பிடிப்பாக்கேக்க, நீங்கள் வந்து ஒரு பேசாத கவிஞனாக இருக்கிறீர்கள் என்று நான் நினைக்கலாமா?*
என்னைப்பொறுத்தவரையில நீங்கள் இந்த முடிவுக்கு வாறது கஷ்டமாயிருக்கும். ஏனெண்டு சொன்னால் என்னட்ட வந்து பல்வேறுபட்ட தளங்கள் தொழிற்படுது (சிரிப்பு)

*அதன் அர்த்தம் சில பேசவேண்டிய இடங்களில பேசாமல் இருந்திருக்கிறீர்கள் என்று கொள்ளாலமா?*
இல்லை. இன்னும் அல்லது இப்படிச்சொல்லாம். நான் இன்னும் என்னுடைய விசயங்களை பேசி முடிக்கேல்ல.(சிரிப்பு) சரிதானே! அதத்தான் நான் சொல்லாம். ஒட்டுமொத்தமா ஒரு இருநூறு கவிதை எழுதியிருக்கிறன். அந்தக் கவிதைகளே வெவ்வேற காலகட்டத்தை தாண்டி வந்திட்டுது. இப்ப நான் என்னுடைய முக்கியமான விசயங்கள் இனித்தான் வரபோகுதெண்டு நினைக்கிறன். நான் முந்தி எழுதினதை எங்கயோ எங்கயோ தாண்டி வந்திட்டன். அப்ப இன்னம் சொல்லாத சேதிகள்தான் நிறைய இருக்குப்போல இருக்கு (சிரிப்பு)

*புதைக்கப்படாமல் "கவிஞர் சேரன்" எப்படித் தற்காத்துக்கொண்டார்?*
நான் நினைக்கிறன். சில சந்தர்ப்பங்களில புதைக்கப்பட்டு(சிரிப்பு) விதையா எழும்பியிருக்கிறன் எண்டுதான். நான் புதைக்கப்படாமல் தப்பினது ஒரு தற்செயல். நான் இப்படி இருந்து உங்களோட கதைச்சுக்கொண்டு இருப்பதற்கு ஒரு அறிவுபூர்வமான விளக்கமில்ல. (சிரிப்பு) இவ்வளவும் காணுமெண்டு நினைக்கிறன்.

*நீகள் ஏன் இன்னும் புலம்பெயரவில்லை கவிதையில். புலம்பெயர்வு உங்களுக்குள் ஏன் இன்னும் நடக்கவில்லை. இத நான் ஒட்டுமொத்தமா ஒரு சமுதாயத்தைப்பாத்துக்கேக்கலாம். ஒரு கவிஞராக இருக்கிறமுறையில் குறிப்பாக உங்களிடம் கேக்கவிரும்புறன்.*
நீங்கள் இந்தக்கேள்வியைத் தவிர்க்கிறது நல்லது. நீங்கள் முழுக்க என்ர கவிதையளைப்படிக்கேல்ல. கடைசியா வந்த என்ர கவிதையள் பல்வேறுபட்ட விடயங்களைப்பேசுது. ஆனா அவை தொகுதியா வரேல்ல.

*அப்பிடியெண்டா நீங்க சொல்றீங்க புலம்பெயர்ந்த மனிதனா எழுதியிருக்கிறீங்க எண்டு.*
புலம்பெயர்ந்த மனிதனா எண்டுசொன்னா நீங்க எதை நினைக்கிறீங்க எண்டு தெரியாது. நீங்கள் சொல்றபடி வசதியா இலங்கையை விட்டிட்டு ஓரிடத்திலும் புலம்பெயரேல்ல எண்டது ரெக்னிக்கலா உண்மை. இப்ப நான் ஒவ்வோரு வருசமும் இலங்கைக்குத் திரும்பிப்போறன். அங்க சரிநிகரில. பிறகு கனடாவுக்குத் திரும்பவாறன் படிக்கிறதுக்கு. இப்ப படிப்பெல்லாம் முடிஞ்சு ஒரேயடியா திரும்பிப்போறன். அப்ப ஒரு வகையில இலங்கையில இருக்கிற துக்கு. இப்ப அதேநேரம் கனடாவில தங்கியிருந்து படிக்கிற சந்தர்ப்பங்கள் அனுபவங்களும் இருக்கு. இலங்கைக்கு திரும்பிப்போக முடியாதெண்ட ஒரு நிலை தனிப்பட முறையில இல்ல. அந்தவகையில புலம்பெயர்ந்த எண்ட ரெக்னிக்கலான விசயத்தில என்ன நீங்கள் எடுக்கேலாது. ஆனால் இப்பநான் 92ல யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறீட்டன். அதுக்குப்பிறகு அங்க நான்

www.tamilarangam.net

போகேல்ல. இனி திரும்பிப்போனாலும் என்ர ஆரம்பகால இலக்கியப்படிமங்கள் ஆழ்மனப்பதிவுகள் அந்த இடத்தோட பிணைஞ்சிருந்தது அந்த இடத்தைவிட்டு ஒட்டுமொத்தமா வெளியேறினது எண்டது என்னப் பொறுத்தவரையில புலம்பெயர்ந்ததாகப் பார்க்கலாம். அதே நேரத்தில பல்வேறு நாடுகளிலயும் திரிஞ்சிருக்கிறன். ஹொலண்டில 2வருஷம் இருந்திருக்கிறன். மற்றது ஒவ்வோருவருஷமும் எல்லா இடங்களுக்கும் திரியிறன். அப்ப என்ர மனிநிலை நிச்சயமா ஏதோ ஒரு இடத்துக்கதான் இருக்கப்போகுதெண்ட மனநிலை எனக்கில்லை. அப்ப ஒரு விடுபட்ட தன்மை ஒண்டு இருக்க அந்தப்பின்னணில இருந்து அதோட உறவு கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

*உணர்வுகளை உள்வாங்கிக் கொள்ளக்கூடியதாக இருக்கிறதா?*
ஓம் இருக்கிறது.

*நீங்கள் ஓரினச்சேர்க்கையை நிராகரிக்கின்றீர்களா? இல்லையென்றால் அதைப்பற்றி உங்கள் கருத்தென்ன?*
இல்லை. ஓரினச்சேர்க்கயை நான் நிராகரிக்கவில்லை. பாலியல் என்பது உயிரியல் ரீதியாகத் தீர்மானிக்கப்பட்டதல்ல. நீங்கள் இருபாலியாய் இருக்கின்றீர்களா அல்லது ஓரினச்சேர்க்கையாளரா இருக்கின்றீர்களா? அல்லது ஆண்பெண் காதல் உறவுகளில்தான் இருக்கின்றீர்களா என்பது உயிரியல் ரீதியாகத்தான் கட்டமைக்கப்பட்டதென்பதில் எனக்கு அவ்வளவு உடன்பாடில்லை. சமூகரீதியாகத்தான் எங்களது பாலியல்பு கட்டமைக்கப்பட்டுள்ளது. அந்த வகையில ஓரினச்சேர்க்கை என்பது சமூகராதியாக கட்டமைக்கப்பட்டதுதான். அதில எந்தவிதமான உயிரியல் தன்மைகளையும் நீங்கள் பார்க்கேலாது. அதாவது எப்பிடி ஒரு ஆணும் பெண்ணும் காதல் வசப்படுகினமோ அதோமதிரி ஒரு ஆணும் ஆணும் ஒரு பெண்ணும் பெண்ணும் காதல் வசப்படுகினம் ஒரு சமூகரீதியான போக்கு. அங்க உயிரியல் வராது.
அந்தக்காரணத்தாலதான் நாங்கள் பிறந்துவளந்த எங்கள் சமூகபண்பாட்டு கெண்டிசனில்- கட்டுப்படுத்தல் அதுகளால எங்கட பாலியல்புகள் அப்பிடித்தான் வந்திருக்கு. இன்னம் தெளிவாகச் சொல்லப்போனால் ஒரு ஆண் ஒரு பெண்ணோடதான் இருக்கோணும்- ஒருவனுக்கு ஒருத்தி என்ற கருத்து இடையில வந்தது. இப்ப அதுவும் கட்டமைக்கப்பட்டுத்தான் வந்தது. ஒரு காலத்துக்கு முந்தி அப்பிடி இருக்கேல்ல. ஒரு காலத்துக்கு முந்தி தாய் தனையர்களைப் புணர்ற வழக்கம் இருந்திருக்கு. இப்ப அப்பிடி நடந்தா அது இன்ஸல்டா போயிடும். இப்ப சட்டரீதியாகவும், சமூகரீதியாகவும் பாலுறவுகள் தீர்மானிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்டிருக்கு. அது இடையில வந்தது. இந்தமாதிரி பாலியல்புகள் பாலுறவுகள் சமூகரீதியாகத்தான் கட்டமைக்கப்பட்டது என்று நாங்கள் ஏற்றுக்கொண்டோம் என்று சொன்னால் ஓரினச்சேர்க்கையா ஆண்பெண் சேர்க்கையா என்ற விசயத்தில எது சரி எது பிழைஎன்ற விசயத்துக்கு அங்க இடமில்லை.

*உங்களுக்கு ஏதாவது அனுபவங்கள் உண்டா? சிறுவயதில் ஏதாவது பாதிக்கப்பட்டதுண்டா?*
இல்ல எனக்கு அந்தமாதிரி ஒண்டுமில்லை.(சிரிப்பு) ஏன் அந்தக்கேள்வி கேக்கிறீங்கள்?
பல கலைஞர்களுக்கு இந்தச்சிக்கல் உருவாவதுண்டு.
எனக்கு நினைவு வரையில் நீங்கள் சொல்வது மாதிரியான பாதிப்பு எதுவும் இல்ல. என்னுடைய பாலியல்பு அல்லது பாலுறவு எண்டது நான் நானாக யோசித்து எடுக்கிற முடிவுதான். ... ஓரினச்சேர்க்கையெண்டது இயல்பு. எனக்கு நிறை நண்பர்கள் இருக்கினம். ஓரினச்சேர்க்கையாளர்கள். ஆனால் தனிப்பட்டமுறையில நான் ஒரு ஓரினச்சேர்க்கையாளன் இல்லை. இதுவரையிலும் இல்லை. இனிமேல் என்னமாதிரி மாறும் எண்டு எனக்குத்தெரியாது.

*பெண்களுடனான பாலியல் உறவுபற்றி விபரிக்கமுடியுமா?*
விபரிக்க எண்டால் எப்பிடி?

*"கவிஞர்" எண்ட முறையில் விபரிக்கமுடியுமா?*
நான் உங்களுக்கு தொடர்ச்சியாகச் சில கவிதைகள் எழுதியிருக்கிறன். இது பற்றிச் சித்தார்த்தனின் இரவுகள் 1,2,3 நீங்கள் அந்த மூன்று கவிதைகளையும்...

*நீங்கள் எக்ஸில் 1 ல் எழுதியிருக்கிற கவிதையையும் சேர்க்கலாம்தானே?*
அத யுத்தத்தையும் சேர்த்த ஒரு நாணயத்தின்ர 2 பக்கமா எழுதின முறையில் இருந்தது. அதைவிட குருதி. பிறகு கடைசியா ழகரத்தில வந்த என்னுடைய நாலைஞ்சு காதல் கவிதைகள் இவ்வளவத்தையும் பாத்தீங்களெண்டால் என்னடைய இந்த காதல் அனுபவங்களையோ காதல் பற்றிய சிந்தனைகளையோ அல்லது பாலுறவு பற்றிய என்னுடைய நிலை.. நான் இப்பசொல்லுற என்னுடைய வார்த்தைகளை விட அத வடிவாகச் சொல்லும்.

*அதன்மூலமாக பார்க்கிறதெண்டு சொன்னால் எனது இக்கேள்விக்கான அவசியமும் அங்கதான் வந்தது. நீங்க ஓர் ஆண் மேலாதிக்க உறவாத்தான் அந்த உறவைப்பாக்கிறீங்கள். சமபாலுறவா பாக்கிறமாதிரி தெரியேல்ல. அதில ஆண்மேலாதிக்க உறவுதான் தொனிக்குது.*
அதோட எனக்கு முற்றுமுழுதா முரண்பாடிருக்கு. ஏனென்று சொன்னால் என்னுடைய கவிதைகளை வந்து நான் திரும்பிப்பார்க்கிறபோது நான் நினைக்கிறன். இரண்டு சந்தர்ப்பத்தில முக்கியமான திருப்புமுனை என்னுடைய கவிதைகளில எனக்கு ஏற்பட்டிருக்கு. முதலாவது 80களில தேசிய விடுதலைப்போராட்டம். அதனுடைய பாதிப்புகள் அதனுடைய பின்னியல எழுந்த தீவிரமான அரசியலையும் சீரிய கவிதையையும் சினேகபூர்வமாக ஒன்றுசேர்க்க முயற்சிசெய்து அதில கணிசமான வெற்றியும் பெற்றுக்கொண்டதால வந்தது.இரண்டாவது பாலியல்பு. பாலுறவு தொடர்பாக குறிப்பாக பெண்ணிய நண்பர்கள் அவர்களுடைய சிந்தனைகள் அவர்களுடன் பழகிய அனுபவங்கள் எங்களில் ஏற்படுத்திய தாக்கங்கள் காரணமாக எங்களுடைய ஆண்மை என்ற கருத்தாக்கத்தையே நாங்கள் கேள்விக்குள்ளாக்கியிருக்கிறம். இப்ப பாத்தீங்களெண்டா ஆண்மை பெண்மை என்ற கட்டமைப்பிலே எனக்கு உடன்பாடில்லை.

www.tamilarangam.net

ஆண்மை என்ற பாரம்பரியமா சொல்லிக்கொண்டு வந்த விசயங்கள் - அதோட ஒட்டுமொத்தமா எனக்கு உடன்பாடில்லை. நீங்கள் பாத்தீங்களெண்டால் என்ர காதல் கவிதையள் தலைகீழாத்தானிருக்கு. அத நீங்கள் எப்பிடி வாசசிச்சீங்களெண்டு எனக்குத் தெரியேல்லை. இதுக்கும் அங்கால மிகச்சின்ன வயசில இருந்தே ஒரு பெண்மைத்தன்மை மிக்கவராயும் ஒரு மெல்லியலாளராகவும் இருந்திருக்கிறன். அப்ப நாடகங்களில எல்லாம் ஸ்தீரிபாட்தான் தருவினம். ஏனென்று சொன்னால் நான் மெல்லிசாகவும் நொய்மையாளராகவும் மெல்லியல்பாளராகவும் கூட இருந்தமையால். இப்ப சாதாரணமாக மெச்சூர் என்று சொல்கிற இந்த வீரமும் புயபலமும் செறிந்த ஆண்மையாக ஒருகாலமும் இருக்கேல்ல. சரிதானே (சிரிப்பு) அந்தமாதிரி விசயங்கள் கவிதையிலையும் வெளிப்பட்டிருக்கு. கவிதைகளில நிறைய பாதிப்பு செலுத்தியிருக்கு. நீங்க வடிவா இன்னொருதரம் மீள்வாசிப்புச்செய்தீங்க எண்டு சொன்னா ஒட்டுமொத்தமா இந்த பாரம்பரியமான காதல் இந்த பாரம்பரியமான கட்டமைப்புகளுக்கு தலைகீழாகத்தான் இருக்கு. அத வேறயாக்கள் கண்டு பிடிச்சிருக்கினம். நீங்கள் திருப்பி வாசிக்கோணும்.

*சுஜாதா முதலான இந்திய பிரபலங்களால பாராட்டப்பட்டிருக்கிறீங்கள். இந்தியாவில இலங்கை கவிஞர்கள் எண்டு கேட்டா 2 பேர்தான் முக்கியமாக சொல்வார்கள். ஒண்டு ஜெயபாலன் ரெண்டாவது நீங்கள். இதுக்கு உங்கள் தனிப்பட்ட தொடர்புகள்தான் காரணமா? அல்லது வேற காரணங்களும் இருக்கா?*
முதலாவது இப்பிடிச்சொல்றாக்கள் எவரையும் எனக்குத் தனிப்பட்ட முறையில தெரியாது.

*தனிப்பட்ட தொடர்புகள் என்றால் உங்களுக்கு சுஜதாவோட டிரக்ட் தொடர்பு தேவையில்லை. ஜெயபாலனுடனான உங்கள் தொடர்பே போதுமானது...*
இந்தக் கேள்வி எந்தவிதத்திலும் முக்கியமில்லாதது. இத நீங்க ஏன் கேக்கறீங்களெண்டு எனக்குத்தெரியாது. தனிப்பட்ட தொடர்புகளாலதான் இந்தமாதிரி விசயங்களெல்லாம் வாறதெண்டது .... அதில என்ன முக்கியத்துவம் இருக்குது. நான் ஆக தமிழ்நாட்டுக்கு 2தரம் தான் போயிருக்கிறன். மற்றது தமிழ்நாட்டில இருக்கக்கூடிய இந்தமாதிரி பிரபலமான ஆக்கள் ஒருத்தரையும் எனக்குத்தெரியாது. ஜெயபாலனை சக கவிஞர் எண்ட முறையிலயும் எனக்கு நல்லாத்தெரியும். எங்கட தனிப்பட்ட தொடர்புகள் மூலம்தான் இப்பிடி வந்திருக்கு எண்றதில சான்ஸ் இல்ல. 83 கலவரங்களுக்குப்பிறகு தமிழ்நாட்டில ஈழத்தமிழர் தொடர்பாக ஒரு விழிப்புணர்வும் பரவலான அறிமுகமும் வரத்தொடங்கீற்றுது. அதுக்குப்பிறகு மெல்லமெல்லமாக வந்து இப்ப புகலிட இலக்கியம் பற்றி அறிமுகமும் வந்தபடியால் ஒரு விழிப்புணர்ச்சி அங்க வந்திருக்கு. அந்த வழிப்புணர்ச்சியின்ர தொடர்ச்சியாத்தான் நீங்கள் இதப்பாக்கோணுமே தவிர தனிப்பட்ட முறையில நீங்க இதப்பாக்கேலாது. வேற எழுத்தாளரைப் பொறுத்தவரையில இத பொருத்தமா இருக்குமோ தெரியாது.

*நிறை இடத்துக்குப் போய் வந்திருக்கிறீர்கள் கனடாவில கனகாலம் இருந்திருக்கிறீர்கள் ஏதாவது மூன்றாம் குழுக்களுடன் உங்களுக்குத் தொடர்புகள் உண்டா?*
லத்தீன் அமெரிக்க சூழலில தேசிய விடுதலைப்போராட்டங்கள் மார்க்ஸியத்தினுடைய புதிய பரிமானங்களைப்பற்றி சிந்திக்கிற எழுதுகிற அந்தப்போராட்டங்களை நடத்திக்கொண்டுவாற பல குழுக்கள் இருக்கு. அந்த வகையான குழுக்களோட எனக்கு அறிவார்ந்த நிலையிலயும் இலக்கியம் சார்ந்த நிலையிலயும் தொடர்புகளும் இருக்கு. இதே மாதிரி எரித்திரியாவில ஈஸ்ட்டிமோரில அந்த இடங்களிலயும் இந்தமாதிரி போக்குள்ள சிந்தனையாளர்களுடன் தொடர்பிருக்கு.

*சரிநிகரின் தாரகமந்திரம் "சரிநிகர் சமானம்" அல்லது இனங்களுக்கிடையிலான சமத்துவம் இது இலங்கைக்கு மட்டுமா? அல்லது சந்திரமண்டலத்துக்கும் சேர்த்தா?*
சமாதானம், சமத்துவம், விடுதலை உரிமைகள் இந்தமாதிரி கருதுகோள்கள் ஒரு *abstract* ஆக எங்கும் பொருந்தக்கூடிய சர்வவியாபகமான கோட்பாடாக நாங்கள் பாவிக்கேலாது. இந்த அவ்வளவு கருதுகோள்களும் குறிப்பிட்ட காலத்திலயும், குறிப்பிட்ட சூழ்நிலையிலயும் உய்த்துணரப்படவேண்டியது. இப்ப விடுதலை எண்டது ஒட்டுமொத்தமானதல்ல. அத ஒரு குறித்த காலத்தில குறித்த ஒரு வரலாற்றுச்சூழ்நிலையில றியலைஸ் பண்ணப்படவேண்டும். அப்பிடிப் பண்ணாட்டி அதுக்கு அர்த்தம் இல்ல. இப்ப சமாதானம் எண்டத கூட எங்கும் பொதுவான பரந்த கோட்பாடா நாங்கள் பாக்கேலாது. ஏனெண்டு சொன்னால் இஸ்ரேல்காரர்களின்ர சிந்தனையில் சமாதானம்எண்றது ஒன்று. பாலஸ்தீனஆக்கள கேட்டீங்களெண்டா அவர்கள் சமாதானம்எண்டு சொல்றது இன்னொண்டு. இந்த மாதிரி விசயங்கள் குறிப்பிட்ட சமூக வரலாற்றுச்சூழ்நிலையில குறிப்பாகத்தான் வரையறைசெய்யப்பட்டு உணரப்படவேண்டும்.

*இனங்களுக்கிடையிலான பிரச்சினையளவுக்கு வர்க்கங்களுக்கிடையிலான பிரச்சினை பற்றிக் கவலையில்லையா?*
எங்களைப்பொறுத்தவரையில நீங்கள் வலு அவதானமா பாத்தீங்களெண்டு சொன்னால் நாங்கள் மூண்டுதரம் பாவிக்கிறம் சரி - நிகர் - சமானம் என்றால் *Perfect equality* என்றால் அது எல்லா வகையான சமத்துவ ஒடுக்குமுறையின்ர சகல அம்சங்களையும் - எங்கட முதலாவது ஆசிரிய தலையங்கம் முதற்காலடியில இந்த விசயங்களைப் பற்றி மிகத்தெளிவா எழுதியிருக்கிறம். நாங்கள் சரிநிகர் சமானம் எண்டு கருதுறது எத? ஒடுக்குமுறைக்கு என்னென்ன காரணங்கள் இருக்கு? என்னென்ன தளங்களில நாங்கள் விடுதலையைப்பற்றி பேசுறம் என்று *point by point* ஆக எழுதியிருக்கிறம்.நான் உங்களுக்கு அந்த எடிட்டோரியலை ஃபக்ஸ் பண்ணி விடுகிறேன்.சரிதானே.(சிரிப்பு)

*அரசியல் இலக்கு என்ன?*
அரசியல் இலக்கு ... சமத்துவம்.

*உங்களுடைய பழைய சோசலிச இலக்கு இல்லையா? அதற்கு என்ன நடந்தது?*
இப்ப பழைய சோசலிச இலக்கு எண்டில்லை. இப்ப வர்க்கம் பால் பாலியல்பு போன்ற பல்வேறு ஒடுக்குமுறையான தளங்களிலிருந்தும் விடுதலைபெற்ற சமத்துவமான சமூகம்தான் எங்களுடைய அரசியல் இலக்கும் இலட்சியமும். அதில

www.tamilarangam.net

எங்களுக்கு எந்தவிதமான மாற்றங்களும் இருக்கெண்டு நான் நினைக்கேல்ல. 10 வருசத்து முன்பு நாங்கள் வர்க்க விடுதலையைத்தான் பேசின்னாங்கள். இப்ப ஒடுக்குமறையின் பலதளங்கள் இருக்கு. அந்த பல தளங்களின்ரையும் சுயாதீனங்கள அங்கீகரித்துக்கொண்டு அதேநேரம் அந்த சுயாதீனத்துக்கு அங்கால ஒரு பொதுவான உடன்பாட்டுக்க வரமுடியும் என்றொரு அரசியல் நிலைப்பாடுதான் எங்கட. அது சிக்கலானதும் தேவையானதும் ஆகும்.

*அது எப்படி தேசியத்தை பேணுதலோட சம்பந்தப்படுகிறது?*
நான் முதல்ல சொன்னது மாதிரி வர்க்கம் இனத்துவம் பாலியல்பு சாதி இவ்வளவத்தையம் ஒடுக்குமுறை இவ்வளவு தளங்களிலயும் இருக்குதெண்டு சொல்லேக்க, இனத்துவத்தை பேசேக்க நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ அது ஒரு அடயாளமாகவும் தேசியமாகவும்தான் பார்க்கவேண்டியிருக்கு. அதின்ர சாதக பாதகங்கள் வேற. ஆனால் பல சந்தர்ப்பங்களில அதுவும் ஒரு மெலெழுந்த சக்தியா வருது. அத நாங்கள் தாண்டிப்போகேலாது. அத நாங்கள் கடந்து போகவேண்டியிருக்கு. அத நாங்கள் **deal** பண்ணிப்போட்டுத்தான் அங்கால போகவேண்டியிருக்கு.

*நாங்கள் அதை கவனத்தில கொள்ளாமல் ஒண்டும் செய்யேலாதுதான் . உங்களது தேசியவாதத்தின் அடிப்படையான அவசியம் என்ன?*
தேசியம் தேசியவாதம்பற்றி *abstract* ஆன கருத்துநிலை பற்றி பேசுறது கஷ்ரம். ஏனெண்டா நாங்கள் வந்து அதனுடைய சமூக வரலாற்றுச் சூழ்நிலையில வைத்துத்தான் பேசோணும். அப்பிடியெண்டு சொன்னால் நாங்கள் எல்லா விசயங்களைப்பற்றியும் குறிப்பாகத்தான் பேசவேண்டியிருக்கு. அதாவது இந்தச்சூழலில எந்தவகையான தேசியத்தைப்பற்றி நாங்கள் பேசிறம் எண்டது. ஆனால் இப்ப ஓரளவுக்கு பொதுவாக தேசியவாதம் என்ற அந்த தேசியவாதங்கள் பற்றி பேசும்பொழுது நாங்கள் மிகவும் கவனமாக இருக்கவேணும் எண்டத நாங்கள் சொல்லலாம். ஏனென்றால் அதற்குப்பலவகையான சாத்தியப்பாடுகள் இருக்கு. அது எந்த வராலாற்றுச்சூழ்நிலையில எந்தவேலையைச்செய்யுது எண்டதப்பொறுத்துத்தான் அதப்பத்தி தீர்மானிக்கவேணும். ஒட்டுமொத்தமா தேசியவாதம் சரிஎண்டது பற்றியோ அல்லது பிழை எண்டது பற்றியோ கறுப்புவெள்ளையா நாங்கள் தீர்மானத்துக்கு வரேலாது. நாங்கள் குறிப்பாகத்தான் பேசவேண்டும்.

*சகல ஒடுக்குமுறைகளும் இருக்கும் தமிழ்சூழல்ல தேசியவாதம் கட்டாயம் அவசியம் என்று கருதுகிறீர்களா? சுருக்கமாகக்கூறமுடியுமா?*
இதில அவசியம் இல்லையா என்று பார்க்கிறதை விட நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ அதோட எழுச்சி பெற்றிருக்கிற தமிழ் தேசியவாதத்திற்கு பலமுகங்கள் இருக்கு. அதில சிலமுகங்கள் நிச்சயமாக இனவாதம் பேரினவாதம்தான். அதேநேரம் தமிழாக்கள் தங்கட அடையாளத்தையம் விட்டிட்டுப்போகேலாது. அந்தமாதிரிச்சிக்கலான நிலையில இருக்கினம். இதில நாங்கள் கட்டன்றைற்றாக பேசேலாது. என்ன சொல்லாம் எண்டு சொன்னால் இந்த நெருக்கடியான நிலையில இத எப்பிடிப்புரிஞ்சு கொள்றது எண்டதப்பற்றி நாங்கள் கொஞ்சம் ஆலோசிக்கவேணும். இந்த தமிழ் அடயாளம் தமிழ்தேசியம் என்றதுக்குள்ள ஆட்சி பெற்றிருக்கிறபோக்கு குறிப்பா விடுதலைப்புலிகளின் தலைமையில அவர்கள் ஒரு ஆதிக்கசக்தியா இருக்கிறபோதும் அவர்களுக்குள்ளால வெளிப்படுகிற ஒரு அதீததேசியவாதம் நிச்சயமா மிகமோசமான ஒற்றைப்பரிமாணமுள்ளதா இருக்குது. நான் முதல்லசொன்னதுமாதிரி அது மிகவும் ஆபத்தானபோக்கு.

*பின்நவீனத்துவம் தேசியம் பற்றிவைக்கும் கருத்துக்கள் பற்றி உங்கள் நிலைபாபடு என்ன?*
பின்நவீனத்துக்குள்ள பலவகையான போக்குகள் இருக்கு. எனக்குப்பரீச்சயமான அளவில அதுக்குள்ள பொதுவா *Post nationalist* அதாவது தேசியம் கடந்த அல்லது தேசியத்துக்கு அப்பாலான ஒரு கருத்தை சிலபேர் முன்வைக்கினம். அவர்கள் அப்பிடி வாறதுக்கு இரண்டுவகையான காரணம் அவை சொல்லுகினம். ஒண்டு இப்ப அண்மைக்காலமாக எழுச்சிபெற்று வந்திருக்கிற இனத்துவ தேசியவாதங்களின் அநியாயம் பொஸ்னியாவிலஇருந்து எல்லா இடங்களிலயும் படு அழிவுக்குப்போகுது. ஆகவே அந்த மாதிரியான தேசியங்கள் ஒரு மிகவும் மோசமா இருக்கு. அது ஒரு காரணம். இரண்டாவது இப்ப மனிதப்புலப்பெயர்வு. மக்கள் லட்சக்கணக்காக தங்கட தங்கட **so called** தேசிய எல்லையை விட்டு வேறஇடங்களுக்கு புலம்பெயர்ந்து போன படியால் அவர்களுக்கு தங்கட தேசம் தேசியம் பற்றின கருத்தே மாறிப்போச்சு. இப்ப ஆயிரக்கணக்கான பொஸ்னியன்சும், மற்றவர்களும் வடஅமெரிக்காவிலயும் அய்ரோப்பாவிலயும் இருக்கேக்க அவர்கள் தங்கட தேசம் தேசியம் தொடர்பா என்ன கருத்துக்கள் வைச்சிருக்கினம்! தேசியம் பற்றின கற்பிதமே வித்தியாசமாத்தான் இருக்கு. அதே மாதிரி அகதிகளா இருக்கிறவர்கள் தங்கட இடத்த பெயர்த்துக்கொண்டு அவர்கள் தேசம் தேசியம் பற்றி யோசிக்கிறது வித்தியாசமா இருக்கு. இப்பிடி பலவகையான இந்த மனிதப்புலம்பெயர்வு நடக்கிறபடியால் அதுவும் குறிப்பா இந்த தேசம் தேசிய எல்லை தேசியம் என்பத பற்றிக்கேள்விக்குள்ளாக்குது. அத ரெண்டாவது காரணம். மூன்றாவது **Identity politics**. பின் நவீனத்துவம் குறிப்பா ஒவ்வோருவருக்கும் அடையாளங்களை முதன்மைப்படுத்துற படியால் சிறுபான்மையினர் அவை இவையிவையின்ர அரசியல் எல்லாம் முன்னுக்கு வந்து அவையெல்லாம் குழுக்கள் கழுக்களாக வந்து தங்கட அடயாளத்தை மேலடுக்கிற ஒரு நிலை வந்திருக்கு. அதுவும் ஒரு பரந்த அளவிலான ஒரு தேச அல்லது ஒரு தேசிய கட்டமைப்புக்குள்ள அடங்குதில்லை. இப்ப இவ்வளவு காரணங்களாலயும் அவர்கள், ஒரு தேசியம் அல்லது தேசம் எண்டத சாத்தியமில்ல எண்ட கருத்தை முன்வைக்கினம். அதில ஓரளவுக்கு ஞாயங்கள் இருக்குது எண்டாலும் அதேநேரம் நீங்க இப்ப உலகத்தின்ர எல்லா இடத்திலயும் பாத்தீங்களெண்டால் பழையபடி தேசியம் தேசியத்தின்ர சார்பில (சிரிப்புடன்) படுமோசமான எழுச்சிகளும் தேசங்கள் உருவாவதும் பிரிதலும் நடந்து கொண்டும்தானிருக்கு. இரண்டாவது இப்பிடி புலம்பெயர்ந்தாக்களுக்குள்ளயும் ஒரு பயங்கரமான மோசமான தேசியவாதம் வந்துகொண்டிருக்கு. அது எல்லாத்துக்கும் இடையிலான ஒருவகையான ஒரு சிக்கலான இடைத்தாக்கங்களும் அடிபாடுகளும் நடக்குது. இதுக்குள்ளால என்னவகையா அது உருவாகுதெண்டு நாங்கள் இப்ப உடனடியா எதிர்வு கூறஏலாது. ஆனால் பின்நவீனத்துவத்தினுடைய சில முக்கியமான ஆக்கள் செய்யிறமாதிரி தேசியத்தை அப்பிடி தூக்கி எறியவும் முடியாது. ஏனெண்டு சொன்னால் நாங்கள் அத தாண்டிப்போகேலாது. நாங்கள் அத ***face*** பண்ணி அதக்கடந்து அதுக்குள்ளாலதான் போகவேண்டியிருக்கு. இப்ப பாலஸ்தீனியர்களும்போய் நாங்கள்.

www.tamilarangam.net

*அதுக்குள்ளால எதநோக்கி போகவேண்டியிருக்கு? சர்வதேசியத்தை நோக்கியா? மீண்டும் தேசியத்தை நோக்கியா?*

இப்ப என்னைக்கேட்டீங்களெண்டா நான்சொல்லுவன் ஒற்றைப்பரிமாணம் உள்ளத விட்டு பன்முகப்பாடான ஒரு அடையாளத்துக்கு பன்முகப்பாடான ஒரு சிந்தனைக்கு நாம்போகவேண்டும். ஏனெண்டுசொன்னால் இப்ப அதுதான் தேவையாயிருக்கு. இந்தமாதிரி விசயங்கள கதைக்கப்போகேக்க எல்லாரும் எல்லாத்தையும் ஒற்றைப்பரிமாணமாய்த்தான் பாக்கினம். இத ஏன்நாங்கள் நேருக்கு நேரா எதிர்கொள்ள வேண்டியிருக்கெண்டால் இப்ப பாலஸ்தீனியர்களிட்டபோய் நீங்க உங்கடதேசியத்தை விடுங்கோ எண்டு கேக்கேலாது. கேக்கலாமோ? அது மாதிரித்தான். அவையிட்ட நாங்கள் தேசங்கடந்த அதுக்கு அப்பாலபோய், இப்ப எல்லா இடங்களிலயும் நிலமையள் மாறுது. நீங்கள் உங்கட அத விடுங்கோ எண்டுகேக்கேலாது. அது யதார்த்தம். அதுதான் நிலைமையாய் இருக்கு. அதுதான் சொல்றன் இத எப்பிடியும் நாங்கள் நேருக்குநேர் முகம்கொள்ளத்தான்வேணும்.

*நீங்கள் பாலஸ்தீனியற்ற தேசியவாதத்தைமட்டும் பாக்கேக்க அந்தப்பிரச்சினை வந்து நீங்கள் இஸரேலையும் சேத்துப்பாக்கேல்ல. இஸ்ரேல் கைவிட்டா பாலஸ்தீனியருக்கு பிரச்சினையில்லை.*

அதத்தான் நான் சொல்றன். நீங்க அப்பிடிப்போகேக்க நான் முதற்சொன்ன கருத்து வருது. *இஸ்ரேல் தொடர்ந்து குடியேற்றுது.* நீங்கள் பன்முகப்பரிமாணத்துக்குப் போகோணும். அதாவது இஸ்ரேல் எண்டத வெறும்யூதர்களுக்கான தேசம் அல்ல என்று அக்சப்ற் பண்ணவேண்டிவரும். ஏனெண்டால் அங்க இருக்கிற கிறிஸ்தவர்களையும் பாலஸ்தீனியர்களையும் மற்ற அராபியர்களையும் வந்து அவர்கள் தங்கட அந்த கட்டமைப்புக்குள்ள சேர்க்கோணும். அப்படிச்சேர்க்கேக்க அந்த ஒற்றைப்பரிமாணம் உடையுதுதானே!

*ஒற்றைப்பரிமாணம் உடைவதன் மூலம் தேசியத்தின் உடைவு சாத்தியம் - சர்வதேசியம் சாத்தியம் என்கிறீர்களா?*

ஒரு புதுவகையான ஒரு அடையாளத்துக்கு அடையாளங்கள் எப்பவும் மாறிக்கொண்டுதானே வருது. காலம்காலமா மாறாத அடையாளம் எண்டொரு மண்ணாங்கட்டியும் இல்லைத்தானே. இப்ப ஒரு சாதகமான பன்முகப்பாடாக இருக்குமென்றால் சாதகமாக வரக்கூடுமென்ன?

*மோர்ஜ் உடனான உங்கள் தொடர்பு என்ன?*

மோர்ஜ் நிறுவனத்தைப்பற்றி உங்களுக்கு எவ்வளவு தெரியும் என்று எனக்குத்தெரியாது. நான் அதப்பற்றி 1979ல இருந்து அவசரகாலகட்டநிலையில இருந்து சொல்லவேண்டிஇருக்கு. மொர்ஜ் 1989ல இருந்து சிங்களப்பத்திரிகையை "சமாதானம்" எண்ட பெயரில வியுக்திய, என்ற பெயரில பத்திரிகையை நடத்தி வந்தவை. 90ல நாங்கள் எல்லாம் யாழ்ப்பாணத்தில இருந்து விரட்டப்பட்டு வந்தாப்பிறகு 90ல தமிழில எந்தவிதமான பத்திரிகையும் இருக்கேல்ல. உண்மையைச்சொல்றது எண்டு சொன்னா 90ல எந்தப்பத்திரிகையும் இருக்கேல்ல. ஆனா புலம்பெயர்ந்த நாடுகளில இருந்து ஒன்றிரெண்டு சிறுசிறுசஞ்சிகைகள் வந்துகொண்டிருந்தது. அப்ப நாங்களும் சொந்தப்பேரில தொடங்கேல்ல. எல்லாம் வேறவேற புனையெரிலதான். ஏனெண்டா அவ்வளவு பயங்கரமான சூழ்நிலை இருந்தது. நாங்கள் அப்பிடி தொடங்கிறதெண்டு இருந்தநாங்கள். அந்த நிலையில வந்த சிங்கள இடதுசாரிமுற்போக்காளர் - சமூகவிஞ்ஞானிகள் சங்கம் - இனங்களுக்கிடையில் சமத்துவமான இயக்கம் இவயள்ள இருந்தாக்கள் இப்பிடி விசயத்துக்கு தங்கட ஆதரவ தெரிவிச்சினம். அப்ப தமிழ்ல நாங்களாவே போட்டுச்செய்யிற சூழலும் இருக்கேல்ல. தமிழ்ள என்னவந்தாலும் உடன புலியளின்ர எண்ட பிடிபடுகிறது. ஒரு பாதுகாப்பும் அங்க இருக்கேல்ல. எல்லாத்தையும் யோசிச்சுப்போட்டுத்தான் இனங்களுக்கிடையிலான சமத்துவம் என்ற இயக்கத்தின்ர ஆதரவோட நாங்கள் இந்த பத்திரிகையை (சரிநிகர்) தொடங்கின்னாங்கள். **office base** ல இருந்து சகலவிதமான ஆதரவும் தந்தினம். அதின்ர 3பேர்தான் தொடங்கினது. பிறகு அதுக்கான நிதியுதவி எண்ட செண்ஸ், நாங்கள் பத்திரிகை விக்கிற சந்தாக்காசுகள் எல்லாம் அவையிட்டதான் கொடுப்பம். ஆனாலும் மிகுதி கடன்மாதிரித்தான் இருக்கு. ஒரு கட்டத்தில கையும் கணக்கும் சரியாய் வந்து லாபமும் வந்தால் சரிதானே! எங்கட பத்திரிகை ஒரு காலமும் யாழ்ப்பாணம் போகேல்ல. புலிகள் காலத்தில தடை. இப்ப கிட்டடிலை யாழ்ப்பாணத்துக்குப்போயிருக்கு. விற்பனை முழுக்க கிழக்குமாகாணத்திலயும் கொழும்பிலையும் தான். அது ஒருவகையான நெருக்கடி. மற்ற நெருக்கடி பிறின்ற் பண்றதுக்கு ஆரம்பத்தில ஒருத்தரும் முன்னுக்கு வரேல்ல. இப்ப எல்லாம் வாறபடியால் நிறையப்பத்திரிகையள் வருது. இயலுமானவரை பத்திரிகை முற்றுமுழுதா எங்கட சொந்தக்கால்ல நிக்கிறதுதான் எங்கடவிருப்பம். அதுக்கான நிலமை இன்னும் வரேல்ல. அதுக்கு நீங்கள் உங்கட ஆக்கள் எல்லாம் எவ்வளவு தூரம் எவ்வளவு தூரம் உதவி செய்யிறீங்கள் எண்டதப்பொறுத்துத்தான் இது சாத்தியம்.

*மோர்ஜிற்கு நிதி எப்பிடி வருகிறது? அது பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?*

மோர்ஜிற்கு பலவகையான - தங்கட தங்கட வழிகள் மூலம் அவையின்ர பத்திரிகை விற்பனை அதோட வெளிநாட்டில இருக்கிற **Solidarity** இயக்கங்கள் உதவிசெய்யுது. **solidarity** இயக்கம் என்றால் நிகரகுவாவில அமெரிக்கா *Sanction* இருக்கேக்க கொலண்ட், சுவீடன், அமெரிக்கா, பிற நாடுகளில இந்தமாதிரி சர்வதேச அமைப்புகள் 80ல இருந்து தாங்கள் மக்களிட்டசேர்க்கிற காசை அனுப்பிறவையள். இப்ப மோர்ஜிற்கு மட்டுமல்ல *Civil Rights Movements democratic* **movements** போன்றவற்றுக்கு அனுப்பிறவையள். அது ஒரு பிரதானமான காசு. சரிதானே. **solidarity** என்ற **base** வருகிறதே தவிர அந்த **us aide america** அவையள் குடுக்கிற அந்த கற்றக்கறிக்குள்ள அல்ல.

*உங்கட கவிதையில - காசியானந்தன் - உணர்ச்சிக்கவிஞர் மாதிரி என்று கொச்சைப்படுத்துறதா நினைக்கவேண்டாம். சில வசனங்கள உணர்ச்சிகரமா சொல்ல முயற்சி செய்யிறீங்கள் உதாரணமா "சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம் வெறும் சோற்றுக்கோ வந்ததிந்த பஞ்சம்". பாரதியாற்ற கவிதை. அது வெறும் சாதாரணமான வசனம். ஆனா அதில உணர்ச்சிஅலைகள் இருக்கு. நான் நினைக்கிறன் சேரன் முக்கியமா இருக்கிறதுக்கு அது ஒரு காரணம். உங்கட கவிதைக்குள்ளால வாற கருத்துக்கள விட உங்களுக்கு இதுகள் பற்றி* ***Personal fealings*** *இருந்தா அதுகள் பற்றி சொல்முடியுமா?*

www.tamilarangam.net

சந்தம் ஒத்திசை ஓசை இதுகள் கவிதையில வாறதுக்கு நான் எதிர்எண்டில்ல. நீங்கள் என்ர கவிதையைப்பாத்தீங்களெண்டால் தெரியும், ஒத்திசையை செயற்கைபூர்வமா பொருத்திறதிலயும் எனக்கு உடன்பாடில்ல. இப்ப கவிதைக்கு பல்வேறு முகங்கள் இருக்கு. அத சிலநேரங்களில காட்சிப்படிமங்களாகவே செயற்பட்டுக்கொண்டுபோகுது. சிலநேரங்களில விசயத்த நேரடியா வெளிப்பாடான முறையில பயங்கரமா அதுதாக்குது. சிலநேரங்களில அது மெல்லிசை ஒத்திசை சந்தம் அதுகளப்பாவிச்சு சில கருத்துகளச்சொல்லுது. அப்பிடி பல்வேறுபட்ட வடிவங்களில பல்வேறுபட்ட வகையில கவிதை சாத்தியமா இருக்குது. என்ர கவிதையைப்பாத்தீங்களெண்டால் இவையெல்லாம் சேந்துதான் வருது. ஆனா என்ன நடக்குது எண்டு சொன்னால் இப்ப இது ஒரு கவிதையிலேயே சிலநேரங்களில இந்த எல்லா அம்சமும் சேர்ந்தும் கலந்தும் பிரிஞ்சும் வருது. நீங்க அதப்பிரிச்சுப்பாக்கேலாது. அதாலதான் இப்ப **socalled** உணர்ச்சிக்கவிஞர்கள் எண்டு சொல்லப்பட்ட ஆக்கள்ள இருந்து வித்தியாசமா இருக்கு. நீங்கள் வாசிச்சீங்களெண்டால் சில கவிதையள்ள ஒலிவாற மாதிரி இருக்கும். ஆனால் அந்த ஒத்திசைக்குள்ளால எழுப்பப்படுவது காட்சிப்படிவம்தான். ஹீஆயிரமாய் உயிர்விழுங்கி எரியும் நாட்டில் மயிர்பிடுங்கம் ஒரு கவிஞன் இன்னும் மிச்சம் போதாதோ, எண்டு வரேக்க அங்க உயிரும் மயிரும் வருது. ஆனா அது எழுப்பிற அந்தப்படிமம் வித்தியாசம் அந்த இடத்திலதான் அந்த **Point** ல ஒலியும் சந்தமும் ஒத்திசையும் கவிதா உணர்வுக்கு சேவகம் செய்யுதே தவிர கவிதா உணர்வும் கவிதைச்சிந்தனையும் ஒலிக்கும் ஒத்திசைக்கும் சேவகம் செய்யுது. அதுதான் வித்தியாசம். அதுதான் காசிஆனந்தனின்ரயோ, புதவை இரத்தினதுரையின்ரயோ பாராதிதாசனாக்களின்ரயோ கவிதைகளும் எங்கடையும் வித்தியாசப்படுது.

*இறுதியாக ஒரு கேள்வி "ஆளுக்கொரு பத்திரிகை நடத்தும்படி சொல்வது" ஒரு அதிகாரவடிவமாக உங்களுக்குத் தொனிக்கவில்லையா?*

ஆளுக்கொரு பத்திரிகை எண்டு சொல்லேக்கயே அதின்ர அடிப்படை நிறைவின்மையாலதான். நிறைவின்மையாலதான் அப்பிடி ஒரு நிலைமை வருது. வீரகேசரிலையும், தினமுரசிலையும், தினக்குரல்லயும் எல்லாம் பிரசுரிக்கமுடியாது எண்டு நினைக்கிறன். அப்ப இந்தமாதிரி நல்ல விசயங்களைப்பிரசுரிக்கிறதெண்டு சொன்னால் அதுக்குமாற்றா சரிநிகருக்கோ அல்லது சிறுசஞ்சிகைகளுக்கோ போகினம். அங்கயும் தாங்கள் நினைக்கிறபடி தங்கட எல்லாம் வரேல்ல எண்டு சொல்லேக்க அங்க இன்னொரு மாற்று தேவையாயிருக்கெண்டு கருதுகினம். அந்த மாற்று வேறெங்கயும் இல்ல எண்டு கருதேக்க தாங்களா ஒரு பத்திரிகையை துவங்கவேண்டி வருது. சிற்றிதழின்ர வரலாறும் தொடர்ச்சியும் எப்பிடி வருதுஎண்டு சொன்னால் ஏற்கனவே இருக்ககூடிய பத்திரிகை ஊடகங்களில இந்தமாதிரி விசயங்களுக்கெல்லாம் இடமில்லை எண்ட படியால்தான் அது வருது. பெரும்பாலும் சரிதானே. அப்ப எல்லாநேரமும் எல்லாரையும் எல்லாப் பத்திரிகைகளும் எல்லாரையும் திருப்திப்படுத்துமெண்டில்லைத்தானே? அப்ப நிறைவு வராது. அப்ப நிறைவின்மை என்றது எல்லா நேரமும் இருந்துகொண்டிருக்கப்போகுது. அப்ப அந்த நிறைவின்மைக்கு என்ன செய்யினம். நீங்கள் உங்கட இதுகளெல்லாம் வரேல்லையெண்டு சொன்னால் நீங்கள் ஒரு பத்திரிகை தொடங்குவீங்க. அல்லது உங்கட இதுகள ஒரு தொகுப்பாப் போடுவீங்கள். உங்கட இதுகள தொகுப்பாப்போடுறதுக்கும் அதுதானே காரணம். அந்தப்போக்கு இருக்கத்தானே செய்யப்போகுது. ஏனென்று சொன்னா மாற்று நியமமா வரேக்கை அதுக்கொரு மாற்று வரும். பிறகு அந்த மாற்று நியமமா வரேக்கை அதுக் கெதிரா இன்னோரு மாற்று வரும்.

*ஆனா ஆளுக்கொரு பத்திரிகை என்பதன் ஆத்தம் ....*

அத நீங்க ஒரு மெற்றா:பெரா எடுக்கவேணும். லிட்டரலா எடுக்கேலாது. "காதில பூ வைச்சான்" எண்டு சொன்னா காதில ஒண்டும் பூ வைக்கிறேல்ல தானே. அந்தமாதிரி. அது எதைச் சொல்லுது எண்டு சொன்னா ஒரு நிறைவின்மை. அத எப்ப ஆதிக்கமா வரும் எண்டு சொன்னா அந்தப்பத்திரிகை மற்ற எல்லாத்தையம் மீறிக்கொண்டு கருத்தியலையும் வேறவிசயங்களையும் தீர்மானிக்கிற ஒரு வலு வரேக்கதான் அப்பிடி வரும். ஒரு எதிர்ப்புக்குரலா ஒரு கலகக்குரலாத்தான் இருக்கும். எதிர்ப்புக் குரலா கலகக்குரலா இருக்கிற சக்திகளுக்கு அவை ஆட்சிக்கு வரும்வரைக்கும் ஆதிக்கசக்தி வராது. அவை ஆட்சிக்கு வந்தோன்ன வந்திரும் என்ன?
(சிரிப்பு)

*குறிப்பு: குறிப்பு அனுப்புவதாகச் சொன்ன சேனன் இதுவரை அனுப்பவில்லை. இது வரை புன்னகை (நின்றுவிட்டது.), அம்மா இதழ்களை இந்தப் பேட்டி தட்டிப்பார்த்துள்ளது.*

www.tamilarangam.net

# அஞ்சலோ அஞ்சல்

சுகன்

லண்டனில் தீவிர பிரசாரகரும், யாழ்ப்பாண இலக்கியத்தின் முன்னாள் கொநதராத்துக்காரருமான பத்மனாப ஐயர்வாள் புலிகளுக்காகத்தொகுத்த "இருபதாம் நூற்றாண்டுத்தமிழனுக்கு" அவரே இப்படி அருவருப்பாக சரிநிகரில் வக்காலத்து வாங்கவேண்டிய பரிதாபம் நம் எல்லோருக்கும் கண்ணீரை வரவழைகின்றது. புலிகளுக்காகத்தொகுக்கப்பட்ட இத்தொகுப்பில் புலிகளுக்கு எதிரான எல்லாவிடயங்களையும் தொற்று நீக்கிவிட்டுப் புலிகளின் விற்பனைக்காகக் கொடுக்கப்பட்டு இத்தோகுப்பு பிரான்ஸில் புலிகளிடம் 20 பிராங்குகளுக்குக் கிடைக்கிறது. சில இடங்களில் இரண்டுமடங்கு விலைகூட.

இருபதாம் நூற்றாண்டுத்தமிழன் ( இப்படி யாரும் இந்த நவீன உலகில் பெயர் வைப்பார்களா ? என்னே ஓர் ஆணாதிக்கம்.) என்ற இப்புத்தகம் பிரதிநிதித்துவப்படுத்துவதும் தமிழன் இப்படி அசிங்கமானவனாக வந்ததிற்குக் காரணம் இலக்கிய மேடையில் வேட்டைநாயாக ஒரு தணிக்கையாளனின் திமிர்த்தனத்தோடு இன்னும் பத்மனாபஐயர்வாள் இருப்பதுதான். அவரே முன்னுரையில் சொல்கிறார்: பலவிடயங்களைத் தான் தணிக்கை செய்ததாக.

அரசியல் நோக்கமெதுவுமில்லையென்கிற பத்மனாபஐயர்வாள் புலிகளிடம் எதற்காக விற்பனைக்குக் கொடுத்தாராம்.அவரது அரசியல்நோக்கம் லண்டன், பரிஸ் இவற்றைத்தவிர வேறு இடங்களில் தெரிய வாய்ப்பில்லை என்பதுதான் பத்மநாபஐயர்வாளுக்கு வாய்ப்பாக இருக்கிறது.

பத்மனாபஐயாவாள் தொகுப்பில் தொற்றுநீக்கிய, ஆபத்தற்றதாக்கிய, நவீன தமிழ் இலக்கியப்போக்குகளில் சில:

1. எதிர்ப்பு இலக்கியம்
2. தலித் இலக்கியம்
3. மலையக இலக்கியம்
4. இஸ்லாமிய இலக்கியம்
5. பெண்ணியம், தலித் பெண்ணியம்
6. புகலிட இலக்கியத்தின் தமிழ் அடையாள எதிர்ப்பு, அடையாள உதிர்ப்பு

இவை போன்ற எந்தப் புதிய போக்குகளுக்கும் இடங்கொடாது அவை பற்றிய எந்தக் குறிப்புகளும் முன்னுரையில்கூட இன்றி ஆபாசக் கதைகளின் தொகுப்போன்றை "இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்" என்று அடையாளப்படுத்துவது அவருக்கும் அவரது சக ( அரசியல்) தொகுப்பாளரான ஜமுனாராஜேந்திரனுக்கும் பிரச்சனைக்குரியதல்லாததாக இருக்கலாம். மற்றவர்க்கு மலந்துடைத்து எறியப்பட்ட "இந்தியாடுடே" தான் ஞாபகத்திற்கு வருகின்றது. புலிகளுக்காகப் புத்தகத்தைத் தயாரித்துவிட்டு கிழக்கிற்கும் மேற்கிற்கும் (வோல்த்தம்ஸ்ரோ [ Walthamstow ] - ரூற்றிங் [ Tooting ] ?) என்று எழுதுவது கொஞ்சங்கூட நல்லாயில்லை.

இந்த வகையிலேயே துடைப்பான் சரிநிகரில் குறிப்பிட்ட எழுத்தாளர்களுடைய ஆக்கங்களை இவர் தவிர்க்க நேரிட்டது.பிறந்த, இனிப்பிறக்கப்போகின்ற எல்லா எழுத்தாளர்களும் தன்னை நோக்கித்தவசு செய்துகொண்டிருப்பதாகத்தான் அவரது சரிநிகர்க் கடிதம் சொல்கின்றது.

எல்லோரும் எழுத்தாளர்கள்தானா ?... என்றுகேட்கும் கேள்வியிலேயே அவரது இலக்கிய அறியாமை வெளிப்பட்டுவிடுகிறது. சமகால இலக்கியக்கோட்பாடு, புத்தகங்கள் பற்றித் தமக்குஎதுவும் தெரியாது என்பதைக் காட்டிவிடுகிறது.

www.tamilarangam.net

புதிய எழுத்தாளர்களின் புதிய எழுத்துக்கள்பற்றி எந்த வாசிப்புமற்ற அஞ்ஞானத்தை இது காட்டுகிறது. ஐயர்வாள் நீங்கள் எழுத்தாளர்கள் என்று கருதும் வரையறைக்குள் மற்ற எழுத்தாளர்கள் எப்போது வந்து சேர்வார்கள்?

1. துடைப்பான் குறிப்பிட்டதற்கும் மேலால் இன்னும் நிறையவே எழுத்தாளர்கள் எழுதுகின்றனர். ப.ஐயர்வாளின் அரசியலுக்கு அது ஆபத்து என்பதால் அல்லது அவரது அஞ்ஞானத்தின் எல்லைக்குள் அவர்கள் எழுத்துக்கள் அடங்கவில்லையென்பதால் அவர்கள் பத்மனாப ஐயர்வாளின் அரசியல், எழுத்தின் மீதான அதிகார மிரட்டல், இவற்றிற்கப்பால் இனியெப்போதுமே எழுதமுடியாது போய்விடுவர்களா என்ன?

இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் எழுதவில்லலையெனில் இனியெப்போதுமே எழுத முடியாதுபோகலாம் என அவர்கள் மிரட்டல், தடை, தணிக்கை, கொலை, இவற்றையும்மீறி எழுதித்தான்வருகிறார்கள்.

இப்புத்தகம்பற்றி எனது இலக்கியநண்பர் இப்படிக்கூறுகின்றார்:

"எனது எழுத்து ஒன்றைப் புலிகள் விற்பார்களாயின் நான் அதிலும் பார்க்கத் தூக்குப்போட்டுச் சாவது மேல்!..."

நாஸிகளுக்கு ஒத்துழைத்த, ஆதரவான பலர் குறித்து இப்போதும் இறந்தபின்னும் விசாரணை நட க்கிறது. ப.ஐயர்வாள் தனது காலத்திலேயே அந்த விசாரணையைச் சந்திப்பான்.

(இக்கடிதம் கொழும்புப்பத்திரிகையான சரிநிகருக்கு அனுப்பப்பட்டு வெளிவரவில்லை என்பதும், அதில் வெளியிடப்படமாட்டாது என்று இதுவரை தெரிவிக்கப்படாததும் சில்லறை விடயங்கள்தாமோ?)

www.tamilarangam.net

# வூப்பெற்றால்

## நேரம்:இரவு 2 மணி

ப.வி.சிறீரங்கன்

உடைவுக்குப்பின்னான exil குறித்த விமர்சனமொன்றைக் கருத்துச்சுதந்திரத்தைக் கொண்டதாகக் கதறியமும் **exil** காரர்களுக்கு எழுதியிருந்தேன்.
**exil 6** வெளியாகிவிட்டது!
ஒரு வாசகனாகிய என் கருத்து வெளியாகவில்லை!
எப்படியுள்ளது கருத்துச்சுதந்திரம்?
இப்போதுபார்க்கிறேன், அதென்ன கருத்துச்சுதந்திரம்?
புரிகிறது,
இதுவும்கூட ஒருவகைச் சுதந்திரம் தாம்:
எப்படி?
ஒருவரின் விமர்சனம் என்கருத்துக்கு மாறுபட்டதாக
இருக்கும்போது, நான் அவற்றை வசதியாக மூடி மறைத்துவிடுதல்
என்வரைக்கும் சுதந்திரமே!
இதன்படி
ஒரு சிறு முயற்சி
ஷோபாசக்தியூடாக நடந்தேறியது.
என்குறிப்பொன்றை ஷோபாசக்தியிடம் கையளித்து என்கடிதத்தை மீளப்பெற முயற்சித்தும், **exil** நண்பர்கள் அதைக்கொடுக்காத சுதந்திரப்போக்கால்- என்னிடம் அதன் போட்டோப்பிரதியற்றதால் நானும், என்வகைப்பட்ட சுதந்திரத்தை உரைத்துப்பார்க்கும்பொருட்டு அக்கடிதத்தின் சாராம்சத்தை மீள எழுதிப்பார்க்கிறேன்:

முதல் வரியில் எப்படியும் **exil** ஆசிரியர் குழுவினருக்கு வணக்கம் என்பது சம்பிரதாயம்.

**exil** இல் வெளியாகிய "பின்நவீனத்துவ நிலை:..."மொழிபெயர்ப்புப்பற்றிய என் விமர்சனமானது அதன் தமிழாக்கம் வெறுமனெவே மொழிபெயர்ப்பைக் கொண்டதாகவேயுள்ளது.மொழியாக்கம் சற்றுமற்றதாகவே நான் உணர்கின்றேன். குறைந்தபட்சமாவது தமிழ்ப்படுத்தல் மிக, மிகமுக்கியம். அறிவுசார்ந்த விடயங்கள் மொழியாக்கப்போதியளவு உழைப்புத்தேவை. அதைச்சாத்தியமாக்கினால் நீண்ட படிப்பினூடே சொற்கள் தமிழ்ச் சூழலைப் பிரதிபலிக்கும்.

"சார்ந்திருத்தல் பெண்கள் கையறுநிலை" குறித்த எஸ்.வி.ர்:.பேலின் கட்டுரையும் மார்க்ஸியத்தை இன்றைய அனைத்து கேள்விகளுக்கும் / முரண்பாடுகளுக்கும் / சமூகத்தில் நிலவுகின்ற சகல பிரச்சனைகளுக்கும் உடனடித் தீர்வு சொல்ல மறுக்கும் தத்துவமாக அல்ல அ்.து தவறிவிட்டதாகக்காணும் போக்க விரவிக் கிடக்கிறது! - என்வரைக்கும் மார்க்சியம் என்பது கணிப்பொறிபோன்ற ஒன்றல்ல - ஒருதடையை அடுத்து ரெடிமேட் பதில்தர. மாறாக மார்க்ய வெளிச்சத்தின் துணைகொண்டு நாம் தேடவேண்டிய இருட்டுப்பகுதிகளை அண்மித்தால் மார்க்ஸியம் இறுகிய பைபிளாக இருக்கமுடியாது.

அடுத்து exil உடைவுடன் மீளவெளியாகிய **exil4 "ATTENTION S.V.P"** என்ற தலையங்கத்துடன் தேவிகணேசன் என்பவர்மூலம் உடைவு குறித்து பலவிடயங்கள் வாசகர்களுக்கு வைப்பதாக விளக்கப்படுத்திக் குறிப்பெழுதப்பட்டிருந்தது. அத்தோடு முன்னட்டையில் exil ஒரு குறிப்பைக்கொடுத்திருந்தது: "எவர்பெயராலும், எதன்பெயராலும் வெக்கங்கெட்ட சமரசங்களுக்கும் அடிபணிவுகளுக்கும் நாம் தயாரில்லை,,

இப்போது **exil 5** என் கையில் வந்துவிட்டது.
ஆர்வமாய் ஒற்றைக்கு ஒற்றை தட்டிப்பார்க்கிறேன்.

www.tamilarangam.net

தேவிகணேசன் தொலைந்தே போய்விட்டார்.

தேவிகணேசன் எந்த வெட்கங்கெடாத சமரசத்திற்காக
**exil** உடைவு குறித்து தங்களின் குடும்பிப்பிடிக் கதறல்களை
மூடிமறைத்தாரோ தெரியவில்லை, வசதியாய் மழைபொழிந்ததை மண்ணால் மூடிவிட்டவர்கள், இடங்கண்டமாட்டை கொன்னச்சன் (ஒரு வகை ஈ ) மொய்த்ததுபோல் ஜெயந்தீசன் ( கலாமோகன் ) சுகனைப் பழிவாங்கும் ஈனத்தனத்திற்கு மொட்டாக்கிட்டுத் துணைபுரிவது எந்தவகைச் சுதந்திரமென்பதை மேலே குறிப்பிட்டேன் காண்!

பிற்குறிப்பு: **exil**க்கு நான் கடிதத்தின் அண்ணளவான உள்ளடக்கம் இஃதுதாம். என் கருத்தை முடக்கி வைத்தவர்களிடம் - என்கடிதத்தை மீளப் பெறமுயன்றும் முடியாத நிலையில் இஃதொருவகை வெளிப்பாடுதாம், ஏனெனில்: "கான மயிலாடக் கண்டு வந்த வான்கோழி தானும் அதுபோல ஆட நினைத்துத் தன் பொல்லாச் சிறகை மெல்லென விரித்து....," அங்கால திக்குது நீங்களே போட்டுப் பாடுங்களேன்!

*ப.வி.சிறீரங்கன்*
*10-05-99*

www.tamilarangam.net

# நிகழ்த்துதலை எழுதுதல்

க.கரிகாலன்

நாடகம்பற்றித் தொடர்ந்து எழுதுமளவிற்கு பாிஸில், அல்லது ஐரோப்பிய நகரங்களில் (லண்டன் கோபப்படாது என வைத்துக் கொள்வோம்) அப்படியொன்றும் நாடகம்பற்றிய அதிதீவிர தாகம் இருப்பதாகக் காணோம். நாடகம் இங்கு பகுதிநேரத் தொழிலுக்கும் அடுத்ததாக இருக்கும்போது நேரத்தைச் செலவு செய்து இவைகளை எழுதி ஒரு பயனும் இருக்கப்போவதில்லை. இங்கு எழுதிக்கொண்டிருப்பது தமிழ் நாடகங்களைப்பற்றித்தான். பயிற்சி போதியளவு இல்லாதபோது வாகனம் ஓட்டுவதைவிடப் பலப்பல மடங்கு ஆபத்தானது. பயிற்சி இல்லாமல் நாடகம் போடலாம் எனப் போட்டுப் பின்னர் இது சரிதானே என்ற திருப்திப்பட்டுக்கொள்வது. பிற எல்லாவற்றுக்கும் வழங்கப்படும் இறுக்கமான விதிகள், வரையறைகள் போலவேதான் நாடகத்துக்கும் என நான் நினைக்கிறேன். எனவே பயிற்சி இல்லையென்பது அது நாடகம் இல்லையென்பதைத்தான் குறிக்கும். எனவேதான் ஐரோப்பாவில் எதற்கு நாடக விமர்சனம் என்பது என் எண்ணம். இதுபோக வேலை, குடும்பம், உண்டியல், பகுதிநேர வேலை, ஓடியோடிக் கிடைக்கிற நேரத்தில் நாடகப்பயிற்சி என்றால் அது நிகழ்த்தப்படும் நாட்களில் பார்ப்பதெற்கென்று இருக்கக்கூடிய ச்..றுதையர்களுக்கு அன்றைக்கென்று "தவிர்க்கமுடியாத" பிறந்தநாள் விழாவோ, வங்கி அப்பொயின்மென்றோ, சுகமில்லையோ வந்து, பார்க்கமுடியாமல்போய்விடுமாம். இப்படிப் பொறுப்பற்ற பர்வையாளக்கூட்டத்தை வைத்துகொண்டு நாடகம் போட்டால்தான் என்ன? போடாவிட்டால்தான் என்ன? இதை எழுதும்போது எழுத்துப்பிழை விட்டால்தான் என்ன?

அப்படியிருந்தும் தொடர்ந்தும் எழுதவேண்டிய நிலை.

குறிப்பாக இரண்டு நாடக நிகழ்வுகள். "சிங்கார வனம்" என்ற ஷோபாஷக்தியின் எழுத்தில் வந்த மனோவின் இயக்கத்தில் உருவான நாடகம். அந்த நாடகம் பற்றி மிகச் சிறப்பாகக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்றால் நான் சொல்லவிளைவது இம்மானுவேலின் (ஆண்டவர்) நடிப்புப்பற்றி. அவரிடம் வெளிப்பட்ட அடக்கி வாசிக்கும் உத்தியை, பாத்திரம் அறிந்து நடிக்கவேண்டிய தேவையை பாிஸ்வாழ் பிரபல நடிகர்கள் (நடிகைகள் இங்கு இருக்கிறார்களா என்ன?) கற்றுக்கொள்வது நாடக வளர்ச்சிக்கு நன்மை தரும். இம்மானுவேல் வேலைகிடைக்காத, பாிஸ்வந்துசேர்ந்த புதிய ஓர் ஆளின் உணர்வு வெளிப்பாட்டை மிகத்தெளிவாகக் கையாண்டார். மேடையின் மூலையில் போய் நீண்ட நேரம் உட்கார்ந்திருக்கவேண்டிய பாத்திரம் என்பதனால் எனக்கென்ன போச்சு என்றோ ஏனோதானோ என்றோ இருக்காமல் நாடகம் நிகழ்த்தப்பட்ட முழுநேரமும் பாத்திரத்தின் உணர்வு வெளிப்பாட்டை கொணர்ந்தது சிறப்பாக இருந்தது. ஒருவேளை வேறு யாரேனும் அதைச் செய்திருந்தால் என்றும் யோசித்துப்பார்த்தேன்: கண்டிப்பாக ஏதேனும் சேட்டைகள் செய்து பார்க்கிறவர்களைச் சிரிக்கவைத்திருப்பார்கள். அல்லது வேறு எதேனும் வழியில் கவனத்தை ஈர்க்க முயன்றிருப்பார்கள். அந்த விதத்தில் நாங்கள் தப்பினது தம்பிரான் புண்ணியம்.

நாடகம்பற்றி எழுதுவதென்றால் இந்தஇடத்துக்கு வரமுன்னரேயே முறைப்படி அந்த நாடகத்தின் கதைச் சுருக்கத்தைச் சொல்லியிருக்கவேண்டும். அது: ஒருகொஞ்சப்பேர் வெளிநாட்டுக்கு வருகிறார்கள். இந்தப் புதிய நாட்டைச் சிங்காரவனம் என்று நினைத்துக்கொள்கிறார்கள். வந்தவுடன் துண்டுப்பிரசுரங்களை வீடு வீடாக விநியோகிக்கும் வேலையைச் செய்யச்செல்கிறார்கள். ஒருவருக்கு வேலை கிடைக்கவில்லை. பிறர் வேலை செய்யும்போது ஒருவர் பிரசுரம் விநியோகிக்கும் ஒரு வீட்டின் லிப்டுக்குள் வைத்து அந்த வீட்டின் பராமரிப்பாளனால் பூட்டப்படுகிறார். பலமான, பரிதாபமான முயற்சிக்குப்பின் அந்த ஆள் மயங்கியோ, வேறுஏதோ விதமாகவோ விழுந்து செயலற்று விடுகிறார். இந்தநேரம்

www.tamilarangam.net

அவரைத்தேடிய நண்பர்கள் அந்த நிகழ்வுக்கு எதிராகக் குரல் கொடுக்கவேண்டி பார்வையாளர்களுக்கு அழைப்பு விடுகிறார்கள்.

இரண்டு மூன்று ஆச்சரியமான சந்தேகங்களுடன் முடிக்க விரும்புகிறேன். நான் பார்க்கும் நாடகங்களிலெல்லாம் சிவப்பு, பச்சை, மஞ்சள் எனப்ப பல வண்ண விளக்குகள் பயன்படுத்துகிறார்களே, அதற்கு ஏதேனும் காரணம் உண்டா் பெண்களின் கூந்தலுக்கு இயற்கையிலேயே மணம் உண்டு என்பதுபோல்? நாடகப்பிரதிக்கும் இயக்குனருக்கும் பிரமாணிக்கம் எதுமில்லாமல் நாடகத்தைக் கொண்டிழுக்கும் வழக்கம் இங்கு எப்படி வந்தது? அல்லது...? ஒப்பனை என்பது என்ன என்பது அறியப்படவில்லையா? பரிஸில் சுத்திச்சுத்தி மூலைக்குமூலை பலவிதமான நாடகங்கள் நடக்கிறதே! இன்னும் பலவுடன்.

பகுதி இரண்டு: பாதர் சவரியும் (நீ.மரியசேவிர் அடிகளார் என்ற பாதர் சவரி) அவரது சீடர்களும் திருமறைக்கலாமன்றத்திற்காக ஓர்கூட்டு நாடக நிகழ்வை பரிஸில் நிகழ்த்தியிருந்தனர்.

தி.கலாமன்றம் நாடகத்துக்கான ஓர் (அல்லது கலைக்கான) முழுநேர இயக்கம். அந்த இயக்கத்தின் முதுகெலும்பு, இதயம், உடல் எல்லாமே பாதர் சவரி, பாதர் சவரி, பாதர் சவரிதான். இதனை நீங்கள் திருமறைக்கலாமன்றத்தின் ஏதாவது ஒரு ஆண்டு மலரைப் பார்ப்பதன் மூலம் தெரிந்து கொள்ளலாம். ஆக இந்த வகையில், அதன் ஒட்டுமொத்த நிகழ்வு வெளிப்பாட்டுக்கும் யாரை நோவது, யாரைக்காய்வது? பராட்டுவதெனிலும் அது யாரைக்குறித்து?

இந்த அமைப்பு பல இளைஞர்களை ஐரோப்பாவிற்கு வருடா வருடம் அழைத்து வருவதன் நல்விளைவுகள் நாடகத்துக்கப்பாலும் நிறைய உண்டு. ஆனால் திரும்பத்திரும்ப ஒரே ஆட்கள் வருவது தவிர்க்கப்படும்போது இன்னுமின்னும் நல்லது. இன்னமொன்று: திருமறைக்கலாமன்றம் யா/திருமறைக்கலாமன்றம் என்றாகிவிடாமல் அது தனது பிரதேச வரையறைகளை நடைமுறையிலாவது கைவிடவேண்டும்.

இந்த நிலையில் திருமறைக்கலாமன்றத்தின் நாடக நிகழ்வுகள் நாடகத்திற்கான அனைத்து அம்சங்களையும் கொண்டிருந்தனவா?

மனுநீதி நாடகத்தை தெரியாத்தனமாக தி.க.மன்றம் போட்டு விட்டதோ எனநினைக்க வேண்டியிருந்தது. **juornal of saiva sidhanda** வெளியிடும் தி.க.மன்றத்திற்கு மனு நீதி நாடகம் / மனுநீதி / மனு சைவ சித்தாந்தத்திற்கு தொடர்பில்லாதது மட்டுமல்ல கிறீஸ்த்தவத்திற்கும் தொடர்பில்லாதது ( பாதர்! "மனு" ஆரியர்களின் ஆள்) என்பது தெரியாமற் போய்விட்டதோ என்று கவலைப்படுகிறேன். அது சரி பாதர், இதெல்லாம் பிஷப்புக்குத் தெரிந்தால் பேசமாட்டாரோ? ( உங்களுக்குத்தெரியாதா பைபிளின் இறுதியாக வந்த திருத்திய தமிழ் மொழிபெயர்ப்பு " மனுமகன்" என்று வரும் இடங்களிலெல்லாம் " மனு" வை எடுத்துவிட்டது. இந்த மொழிபெயர்ப்புக்கூட பிரிவினைச் சகோதரர்கள் என்று அந்தக்காலத்தில் உங்கள் மூதாதைகளால் துரத்தப்பட்ட புரட்டஸ்டான்ற் மற்றும் பிறபிரிவினருடனும் சேர்ந்து பல்லாண்டுகால முயற்சிக்குப்பின் செய்து முடிக்கப்பட்ட மொழிபெயர்ப்பு, இதற்கு சென்னை-மயிலைப் பேராயர், மதுரைப் பேராயர் ஒப்புதல் நற்சான்று கூட உண்டு-அத்தோசியோ(ன்). இப்போது தமிழ்நாட்டில் பல பதிப்புக்கள் வந்து மக்களால் பயன்படுத்தப்படுகிறது.)

முழுக்கமுழுக்க தொழில் முறை நாடகக் கொம்பனி போல் *உங்களுக்கென்று சில சமூகப் பொறுப்புணர்வுகள்* இருக்கத்தானே செய்யும் பாதர். அதனால்தான் நீங்கள் அந்தக்காலத்து மக்களுக்கே (சோழ சாம்ராச்சியம்) இது கவைக்குதவாது என்று தெரிந்த விசயங்களைக்கூட கருப்பொருளாக எடுத்திருக்கிறீர்கள். மனிதன் பல நாடுகளிலும் பலப்பலவிதமாகவும் சட்டங்களை மாற்றித் திருத்தி முன்னேறினாலும் பரவாநஹி உங்களுடைய பழையபஞ்சாங்கங்களை வெள்ளைக்காரனுக்கும் (வெள்ளைக்காரிச்சிகளைப்பற்றி நாங்கள் எண்டைக்குக் கவலைப்பட்டது)போட்டுக்காட்டித்தான் கைவிடுகிறது எண்ட முடிவு போல. பிரச்சனை என்னவென்றால் பழைய கதைகளை நீங்கள் போடுகிறீர்கள் என்பதல்ல. பழைய விழுமியங்களைக் கட்டிக்காப்பது பற்றித் தெரியாமல் செய்து கொண்டு போகிறீர்கள், அல்லது தெரிந்தே. புதுமைப்பித்தன் அகலிகை பற்றிய மறுவிழுமியப்படுத்தலை(சாபவிமோசனம்) முன்வைத்ததுபோலவோ, அல்லது தேவா " சிலம்பு" கதையில் கண்ணகியின் நிலைப்பாட்டை மறுவிசாரணை செய்தது போலவோ செய்ய முற்பட்டிருந்தால் எங்களுக்கும் பரவாநஹிதான்.

நீங்கள் கூத்தையும் நவீன நடன அசைவுகளையும் குறியீட்டுமுறை மேடையமைப்பையும் பயன்படுத்தி சிறப்பாக நடிக்கக்கூடிய நடிகர்களையும் exploit பண்ணி இப்படியானதொரு அருமையான கருத்தை சனத்துக்கு ஐயாயிரம் மைல் கடந்து வந்து சொல்லியிருக்கிறீர்கள். நன்றி. அடுத்த தடவை வரும்போது பாஸ்போட், விசாவுக்கு முந்தியே நீங்கள் உங்களுடைய இதழ்களில் நாடகங்களில் எடுத்தாளப்படவேண்டிய விசயங்கள் என்றுசொல்லி, எழுதியவைகளையெல்லாம் கொஞ்சம் திருப்பிப் பார்த்துவிடுவது நல்லது.

சாகுந்தலை நாடகம் மிகச் சிறப்பானது. ஏனோ உங்களுக்குக் கவனயீர்ப்பை ஏறபடுத்துவன எல்லாம் கொஞ்சம் வடமொழிச் சாயம் பூசிருக்கவேண்டும் போல. நாடகத்தின் தன்மையைப்பொறுத்து அது நாட்டிய நாடகமாயிருப்பதால் நாங்கள் வகை வகையான நடனச் சீர்களையும் ராக வேறுபாடுகளையும் எதிர்பார்த்ததில் தவறில்லையே. ஆனால் பாதர் உங்களுக்கே தெரியும், அதில் பயன்படுத்தப்பட்ட ராகங்கள் பெரிய வித்தியாசமுடைய தாள வேறுபாடுகளைக் கொண்டிருக்கவில்லையென்பது. நாடகத்தில் துறைதேர்ந்தவரான உங்களுக்கு இப்படியே நாடகத்தைப்போட்டதில் உடன்பாடு இருந்திருக்காதென்றே நினைக்கின்றேன்.

www.tamilarangam.net

நாட்டியம், அதன் அரசியல் பற்றியெல்லாம் யோசிக்கவேண்டிய காலமிது. நாட்டிய நாடகத்தில் முழுக்கமுழுக்க அந்தப் பெண் மட்டும்தான்() நடனமாடிக் கொண்டிருந்தது. **choriography** என்பதில் பரதம் மட்டும்தான் அடங்கும் என்றில்லையே. மற்றொருவர் பாடிக் கொண்டிருந்தார். ஆனால் பார்ப்பவர்களுக்கு ஐயோ விட்டால் போதும் என்றாயிற்று. அதைப் புரிந்து கொண்டு நிறுத்திய புத்திசாலித்தனம் தங்களைத்தவிர யாருக்கு வரும். கலைமுகத்தில் மேடையின் பௌதீக அமைப்புப்பற்றியும் அதன் முறையான, சரியான பயன்பாடு பற்றியும் எழுதப்பட்டுப் படித்ததாக ஓர் ஞாபகம். ஆனால் சாகுந்தலை நாடகத்தின் பெரும்பாலான பகுதிகள் மேடையின் **cc** பகுதிலேயே நடந்து முடிந்தததைத்தான் நான் பார்க்கக்கூடியதாகவிருந்தது. சாகுந்தலை நிகழ்த்தப்படும்போது இசையமைத்தவர் மிகவும் அதிகமான கருவிகளைப் பயன்படுத்திக்கொண்டிருந்தார். இடதுகையில் ஆர்மோனியமும் வலதுகையில; **keyboard** ம் வாசித்த திறன் மறுக்கமுடியாதது. ஒரு சிறு மாத்திரைகூட இடைவெளி விட்டுவிடாது மிகக் கவனமாக வாசித்தார். மொத்தத்தில் பாகவதர் காலத்தில் வந்த சகுந்தலை படத்துக்கும் நிகழ்வில், கருவில், உத்திமுறையில், என்ன வித்தியாசம். அது படம், இது நாடகம் என்பதா? அப்படியாயின் ஏன் தி.மன்றம். சாதரண ஓர் நாடகக்குழு இதே வேலையைச் செய்யுமே!

இறுதியாக இதிகாசப்பெட்டகம். இதற்கு வேறு ஏதும் அர்த்தம் எடுக்கவேண்டாம் என்ற முன்னுரை வேறு. முதல் நாடகங்களிலேயே உங்களுடைய அரசியல் நிலைப்பாட்டுத் தெளிவு தெரிந்துவிட்டதால் இந்த நாடகத்தில் அதுகளெல்லாம் எதற்கு.

நல்ல நடிகர்கள், சரியான கருத்தேர்வு, முறையான-தேவையான பயிற்சி என்பன, சரியான ஓர் இயக்குனர் என்பன ஓர் நாடகத்திற்கு முதன்மை நிபந்தனைகள். நாடகத்தில் அசைவுகள் ஒவ்வொன்றும் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டதாக இருக்கவேண்டும். கையாளப்படும் இடை வெளிகள் முதல் மேடையில் நுழையும் இடம்வரை. இல்லாவிடில் அவ்வப்போது மாறும் அசைவுகளிற்கும் இடைவெளிகளிற்கும் நாடகத்தில் பொருளில்லாது போய்விடும்.
படத்தில் காட்டியபடி **a,b,c** நிலைகளில்தான் நடிகர்கள் முழுநேரமும் நடமாடிக் கொண்டிருந்தனர். **a a** ல் உள்ளதுபோல் ஒரேயொரு நடிகர்மட்டும் நடாமாடினார். எனவே அது அவருடைய தனிப்பட்ட அறிவின் காரணமாகத்தான் என்று உணரமுடிந்தது. குறைசொல்லவேண்டுமென்பதற்காக இதைச் சொல்லவில்லை. ஐரோப்பிய நாடுகளில் நாடகம் போடுகிறோம். தொழில்முறையாக நாடகத்தைச் செய்கின்றோம். ஐரோப்பியர்களையும் கூட்டிக்கொண்டுவந்து எமது நாடகங்களைக் காண்பிக்கின்றோம். ஒன்று எங்களுக்கேயான மரபான கூத்துப்போன்ற கலைவடிவங்களை இங்கே பிரதிநதித்துவப்படுத்த வேண்டும். அல்லது, நாங்களும்" நவீன" நாடகம்தான் போடுகிறோம் எனப் புறப்படும்போது நாடகக்கூறுகளில் கவனக்குவிப்புச் செய்யவேண்டும்.

அருமையான நடிகர்கள். பெரும் சனங்களின் ஒத்துழைப்பு. என்னஇருந்தும் என்னபயன்? திருமறைக்கலாமன்றம் சிறப்பாக வளரவேண்டுமென்றால் பாதர் சவரி முறையான சமய நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். திருமறைக்கலாமன்றம் வளர வேண்டுமென்றால் பாதர் சவரி சாதாரண சவரியாகவேண்டும்-அல்லது- அடுத்த தலைமுறையினரிடம் விட்டுவிட்டு கூறாமற்சன்னியாசம் கொள்ளவேண்டும். இரண்டும்தானென்றால் தமிழில்தான் நிறையப் பழமொழிகள் இருக்கின்றனவே! கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை - ஆத்தில ஒரு கால் சேத்தில ஒரு கால்

குறிப்பு:

*அம்மா இதழ் 8இற்கு அரங்கு பற்றிய தொடருக்காக கொடுத்தது.
மீதி வரலாறு வழக்கம் போலவே!
நோ கொமன்ற்ஸ் ப்ளீஸ்!*

*க.கரிகாலன்* என்ற எஸ்.வி.ற:.பேல்

*ஆதாரம்: அம்மா இதழ் 9: 1999 ப.5*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேவிகணேசன்

## கருத்துக்களோடு கூடு விட்டு கூடு மாறும் நம் நாட்டுப் படைப்பாளிகளும் இதில் அடக்கம் இதை எம்மிடையே இருக்கும் பச்சோந்திப் படைப் பாளிகளால் ஜீரணித்துக்கொள்ளமுடியாது என்பது உண்மையே...

அஜித் ராம் பிரேமிள்,

இந்த மனிதனைப்பற்றி இம்மனிதனின் வாழ்தலைப்பற்றி 06.01.97க்கு முன்னர் எத்தனை பேர் அறிந்திருந்தார்கள்? அறிந்தவர்களில் எத்தனைபேர் எழுதினார்கள், பேசினார்கள்? ஏறத்தாழ எல்லோரையும் போலவே பிரேமிளின் படைப்புக்கள் என்னாலும் அவர் இல்லாது போன நாட்களில் தான் அறியக்கிடைத்தது. அவரைப்பற்றிய, அவரது படைப்புகள் பற்றிய எனது தேடலில் இவரை அண்மித்தவர்களிடம் என்னால் கேட்டுக்கொள்ளப்பட்டதையும் கூறிக்கொண்டு, மீறல்-4 பிரேமிள் சிறப்பிதழில் உள்ள "அங்குலிமாலா" எனும்பிரேமிளின் கதையினை அம்மாவுக்கு மறுபிரசுரம் செய்ய தெரிவு செய்துள்ளேன்.

இலங்கையில்திருகோணமலையில் பிறந்த பிரேமிள் இலக்கியப்பசிதீர்க்க இந்தியாவுக்கு இடம் பெயர்ந்து,தன் வாழ் நாளில் வாசிப்பையும் எழுத்தையும் தவிர வேறு எதையும் செய்திராத ஒரு தீவிரமான படைப்பாளி. ஓவியம், நாடகம்,கதை, கவிதையென தன் படைப்புக்களை இட்டுச் சென்ற பிரேமிள் தீவிர விமர்சகனும் கூட. விமர்சனங்களை ஜீரணக்க முடியாத படைப்பாளிகள் ஏசல் காரர் என இவரை ஒதுக்கி இருட்டடிப்பு செய்து கொண்டமை தெரிந்ததே. யாரோடும் சமரசம் செய்து கொள்ள முடியாத போக்கு இவருடையது. "தமிழில் தனக்குத்தெரிந்த அளவுக்கு வேறு யாருக்கும் தெரியாது" எனச்சொல்லி வந்த ஒரு உண்மையான படைப்பாளி. இதச்சகித்துக்கொள்ளமுடியாதோர் பலர். கருத்துக்களோடு கூடு விட்டு கூடு மாறும் நம் நாட்டுப் படைப்பாளிகளும் இதில் அடக்கம்.

ஒரு இடத்தில்

... இந்த மாதிரி அணிவகுப்புக்களில் லெப் ரைட் போடுவதல்ல என்வேலை. தமிழ் இலக்கியக்கருத்துலகிலும், சிருஷ்டித்துறையிலும் நான் ஒரு கெரில்லா. ஒரு பிரசுர சாதனம் தனது வேலைகளுக்கேற்ப என்னை உபயோகித்துவிட நான் இடம் தர மாட்டேன். எனக்கு ஒரு புரோகிராம் உண்டு. அந்தப்புரோகிராமுடன் இணைந்து செயற்பட முன் வருகிற ஒரு சாதனம் மூலம்தான் நான் செயற்படுவேன்...

என்று, கருத்துக்களை மாற்றி மாற்றி காசுக்காக படைப்புக்களை விற்கும் படைப்பாளிகள் மீது காறி உமிழ்கிறார். இது நிறையப்பேருக்கு உறைக்கும். இதை எம்மிடையே இருக்கும் பச்சோந்திப் படைப்பாளிகளால் ஜீரணித்துக்கொள்ளமுடியாது என்பது உண்மையே.

இவர் ஒரு மிகச்சிறந்த கவிஞரும் கூட. கவிதைகளில் இவர் ஏற்படுத்திய தாக்கம் மிகப்பெரியது. இவரின் கவிதைகள் பற்றி ஒருவர் குறிப்பிடுகையில் " பிரேமிள் தொடர்ந்து தன்னை ஒவ்வொரு விதமாக மாற்றிக்கொண்டு அவரைப்பின்பற்றுவது எளிதான காரியமாக இல்லாமல் செய்துவிடுகிறர்" என்கிறார். பிரேமிளை சமகால எழுத்தாளர்கள் ஞாபகத்தில் வைத்து படைப்புக்களைத்தரவேண்டும். அப்போதுதான் நல்ல புடைப்புக்களை நாம் காண முடியும். அவரது படைப்புக்கள் என்போன்றவர்களுக்குச் சென்றடைய வேண்டியே அம்மாவுக்காக தெரிவு செய்துள்ளேன்.நன்றி:மீறல்-4(பிரமிள் சிறப்பிதழ்)

இக்குறிப்பு அம்மா-4க்காக கொடுக்கப்பட்டு எவ்விதகேள்வியுமில்லாது இரண்டு வரிகள் நீக்கம் செய்யப்பட்டு பிரசுரிக்கப்பட்டிருந்தது.இக்குறிப்பு தவறானது எனக்கருதியிருப்பின் முழுவதையுமே பிரசுரிக்காது விட்டிருக்கலாம்.படைப்பாளனிடம் தொடர்புகொள்ளாது தனது சுயசிந்தனையில் படைப்புக்கள் மீது கை வைப்பது, பின்அதை மறுதலிக்க ஆயிரத்தெட்டு பொய் சொல்லி அழுதுவடிப்பது.

இங்கு வெட்டப்பட்ட இரன்டு வரிகள் பற்றி அம்மா ஆசிரியர் மனோகரனிடம் கதைத்த போது (தொலை பேசியில்) எதற்காக வெட்டினீர்கள்? யாரைக்காப்பாற்றினீர்கள்? எனக்கேட்டபோது, அச்சுப்பிழை ,ஒழுங்குபடுத்தும்போது விடுபட்டு விட்டது, எனச்சொல்லிவிட்டு அடுத்தவினாடி அதே போனில் அருகிலிருந்த நண்பரிடம் , உவன் கேட்டானெண்டால் அச்சுப்பிழை எண்டு சொன்னால் போய்விடுவான். உது அவனவன் சொல்ல உவர் காவிக்கொண்டு திரியிறார்,உதுக்கேன் பதில் சொல்லுவான்?

என்று கூறிய மனோகரன்தான் சென்ற அம்மா இதழில் தான் வெட்டுவதில்லை என, வெட்டுதலுக்கு எதிர்க்குரல் கொடுப்பதை "சிலுமிசங்கள் கன காலம் இருக்காது"எனக் கதையளக்கிறார்.

www.tamilarangam.net

# நட்புடன் கலைச்செல்வன் அவர்கட்கு,

சிவலிங்கம் சுரேஸ்குமார்

தங்களின் உயிர்நிழல் கண்டேன். **exil** இரண்டாகப்பிரிந்தாலும் புலம்பெயர் இலக்கியத்திற்கு இன்னுமொரு பத்திரிகை மிகவும் அவசியமே. அந்த வகையில் தங்களின் இந்த முயற்சிக்கு எனது வாழ்த்துக்களுடன் "உயிர்நிழல் 1"இல் வெளியான ரயாகரனின் கருத்துக்கள் பற்றிய எனது விமர்சனத்தையும் தெரிவிக்கவேண்டியவனாகிறேன். ரயாகரன் தனது கட்டுரையில் நீ, நான், அவன், இவன், என்று கட்டுரை மரபிற்கு முரணாக ஏதோ வெறியில் பத்திரிகை மரபிற்கு முரணாக ஏதோ வெறியில் பத்திரிகை மரபுகளை மறந்து ஒவ்வாத வார்த்தைப்பிரயோகங்களை கையாண்டுள்ளார். தாங்கள் இனிமேல் தங்களின் "உயிர்நிழல்" இன் தரத்திற்காக தயவுசெய்து இவற்றைத்திருத்தி அமைத்தால் உயிர்நிழலின் தரம் மேம்படும். இந்த வேண்டுகோளைத் தயுவுடன் கருத்தில் கொள்வீர்கள் என நம்புகிறேன்.

ஷோபாசக்தி *exil* இல் பாடிய கல்வெட்டுடன் தனது கருத்திற்குச் சமாதிகட்டுவதாக புலம்பும் ரயாகரன், இருள்வெளிக்கான வெளியீட்டுப் பிரசுரம் வெளிவந்தவுடன் அவரது கூஜா அசோக்குடன் இணைந்து வெளியிட்ட "ஒரு சமுதாயச் சீரழிவின் தொடக்கம்" என்ற பிரசுரத்தில் ***LTTE*** இனரது புகழ் பாடியதுடன் மட்டுமன்றி இருள்வெளி வெளியீட்டுக் குழுவினரையும் ***LTTE***யினரிடம் காட்டிக்கொடுக்கும் மறைமுக குள்ளநரித்தனமான தமது அரசியலை (இதுதான் ரயாகரனின் ***NLFT*** அரசியலோ?) வெற்றிகரமாகச் செய்து முடித்துள்ளார். "ஒரு சமூகச் சீரழிவின் தொடக்கம், என்ற பிரசுரம் வெளியிட்ட ரயாகரனினதும் அசோக்கினதும் நோக்கமே இருள்வெளி வெளியீட்டுக்குழுவினரான ஷோபாசக்தி, சுகன் மற்றும் அவர்களது நண்பர்களுக்கும் நிரந்தரமாகக் கல்வெட்டு அடிப்பதே. ஷோபாசக்தியின் கருத்துக்களை எதிர்கொள்ள முடியாநிலையில் ரயாகரனின் ***NLFT*** இயக்கத்தினதும் அசோக்கின் ***ENDLF*** இயக்கத்தினதும் கேவலமான அரசியல் சூதாட்ட முறைகளையும் குள்ளநரி மூளையையும் பயன்படுத்தி ***LTTE***யினர் புகழ்பாடி அவர்கள் கையால் ஷோபாசக்தியையும் நண்பர்களையும் அழிக்க முயற்சித்துள்ளனர் என்பது ஒரு சமூகச் சீரழிவின் தொடக்கம் பிரசுரத்தின் மூலம் தெரிய வருகின்றது. (***NLFT+ENDLF*** கூட்டுச் சதி?)

ஷோபாபசக்திக்கு ஏதும் நடந்திருந்தால் ரயாகரனும் அசோக்கும் நெஞ்சிலடித்துக் கதறி அஞ்சலிப்பிரசுரம் வெளியிட்டு புலம்பெயர் இலக்கியத்துக்கு (ரயாகரன் பார்வையில் புலம்பெயர் இலக்கியம் என்பது புலம்பெயர் அரசியலே) ஒரு மாபெரும் இழப்பு என்று கூட்டம்கூட்டிப் புலம்பி வேசமிட்டு, அவர்களது மனதினுள் மகிழ்ந்திருப்பார்கள். (அரசியல் தெரியாதவர்கள் ஆயுதங்களுடன் மட்டுமே பேசத்தெரிந்தவர்கள் என்று வெறும் உணர்ச்சியின் அடிப்பயையிலேயே செயல்படுபவர்கள் பொறுப்பற்றவர்கள் என்று ரயாகரனும் அசோக்கும் எண்ணிக்கொண்டிருந்த ***LTTE*** யினர்கூட ரயாகரனையும் அசோக்கையும் கைவிட்டகதை பரிதாபத்திற்குரியது. பாவம்!)

ஒருவிதத்தில் பார்த்தால் ரயாகரன் தான் ஷோபாசக்திக்கு நன்றிசொல்லவேண்டும். என்றோ மக்களால், இலங்கை மாணவ சமுதாயத்தினால் ரயாகரனுக்கு கல்வெட்டுப்பாடப்பட்டுவிட்டது அறிவு ஜீவியான ( ? ) ரயாகரனுக்குப் புரியவில்லையா? ஷோபாசக்தியால் ரயாகரனுக்கு எழுதப்பட்ட கல்வெட்டைப் படித்துப்பார்த்த பலர் யார் இந்த ரயாகரன் என்றுதான் கேட்கிறார்கள். (ஷோபாசக்தியின் எழுத்துக்கள் புலம்பெயர் இலக்கியத்தில் பலராலும் விரும்பிப் படிக்கப்டுகின்றது.) ஷோபாசக்தியின் கல்வெட்டை படித்தபின்தான் ரயாகரன் என்பவர் அந்தக்காலத்தில் சனநாயகத்துக்காக அனுங்கி அனுங்கிக் குரல் கொடுத்திருக்கிறார் என்பது சாதாரண வாசகர்கள் பலருக்குத் தெரியவருகிறது. விளம்பரப்பிரியரான ரயாகரனுக்கு ஷோபாசக்தியால் நிகர லாபமே.

புலம்பெயர் இலக்கியம் புலம்பெயர் மக்களுக்கு ஒரு தெளிவான பாதையைக் காட்டுவதற்கான கருத்துக்கள் சம்பந்தமான ஒரு ஆரோக்கியமான விமர்சனங்களை உருவாக்குவதாக இருக்கவேண்டுமே தவிர எழுத்தாளர்கள் தங்கள் அதிமேதாவித்தனங்களைக் காட்டுவதற்கும் நான் செய்தேன்... நான் கிழித்தேன்... ( ரயாகரன் இதுவரை புலம்பெயர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலக்கியத்திற்கு என்ன உருப்படியான சேவை செய்துள்ளார் என்பதை அவரிடமே கேளுங்கள்.) என்ற தான்தோன்றித்தனமாக சுயவிளம்பரப் படுத்திக்கொள்வதற்காக அல்ல என்பதை ரயாகரன் முதலில் புரிந்து கொள்ளவேண்டும்.

இலங்கை அரசியலில் தன்னைத் தலைவனாக உயர்த்திக்கொள்ள தனது கருத்துக்களை ஏற்காதவர்களை படுகொலை செய்வதும் புலம் பெயர் இலக்கியத்தில் தனது கருத்துக்களுக்கு மாற்றுக்கருத்து உள்ளவர்களை மற்றவர்களை தூண்டிவிட்டு அழிக்கமுயல்வதும் எந்தவகையில் மாறுபடுகிறது என்பதை ரயாகரனின் வாசகர்களுக்கு ரயாகரன் தெளிவு படுத்துவாரா? இப்படிப்பட்ட ரயாகரன் தனது பல்கலைக்கழக மாணவர் போராட்டக் காலத்தில் தனது உயர்வுக்காக எத்தனை மாணவர்களைக் களவாகக் காட்டிக் கொடுத்திருப்பார். எவ்வளவு விடயங்கள் அவரால் குழிதோண்டிப் புதைக்கப்பட்டிருக்கும்.

அன்றைய பல்கலைக் கழக மாணவர் போராட்டங்கள் படிப்படியாக சீரழிய யார் காரணம்? அன்றைய மாணவர் போராட்டத் தலைவன் என்று தன்னைக் கூறிக்கொள்ளும் ரயாகரன் இன்று மாணவர் சமுதாயத்திற்கே தெரியாத ஒருவராயிருக்கக் காரணம் என்ன? ***LTTE***யினரைவிட ரயாகரனைப்போன்ற வக்கிர மனம் படைத்தவர்களே சமுதாயத்துக்கு ஆபத்தானவர்கள் என்பதை புலம்பெயர் சமுதாயம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

ஷோபாசக்தியை அ.மார்க்சின் தத்துப்பிள்ளையென்று கூறும் ரயாகரனுக்குஅவரதுகூஜா அசோக் ஒருகிழமையில் எத்தனை நாள் அ.மாாக்சுக்கு ரெலிபோன் எடுக்கிறார் என்று தெரியுமா? ஷோபாசக்தி ரயாகரனின் மனைவியிடம் நான்தான் ஷோபாசக்தி என்று கூறி அறிமுகம் செய்துகொண்டதை விமர்சித்த ரயாகரன் இந்த சமூகத்தின் சாதாரண பிரஜை என்று தன் மனைவியை தன்னைவிட வேறுபடுத்தி (ரயாகரன் மட்டும் சமுதாயத்தின் முக்கிய பிரஜையோ ) கூறியிருக்கிறார். தான் ஒரு முன்னைநாள் ***NLFT*** உறுப்பினர் என்பதை மறைத்து அராஜகத்துக்கு எதிராக இயக்கங்களுடன் மோதிய ஓர் தனிமனிதனாக தன்னை அடையாளம்காட்டி ஒரு மார்க்ஸிச வாதியாக தன்னைத்தானே பிரகடனம் செய்யும் ரயாகரன் தனது மனைவியைக்கூட ஒரு சமூகப்பொறுப்புள்ள பிரஜையாக மாற்றமுடியாத கையாலாகாதவர் என்பதை தன்னையறியாமலே தன் எழுத்தின்மூலம் தன் வாசகர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளார். தனது மனைவியை குழந்தை பெறவும் சமைத்துப்போடவுமே தெரிந்த ஒரு பெண்ணாகக் காட்டும் ஆணாதிக்கம் மிக்க ஓர் மனிதனாகத் தன்னை அடையாளம் காட்டியுள்ளார். இப்படிப்பட்ட ரயாகரனால் எப்படி ஓர் சமுதாய எழுச்சியை உருவாக்கமுடியும்? ரயாகரன் இதழ் நடத்துவது சுயவிளம்பரத்திற்காகத்தான் என்பதற்கு இதைவிடவேறு என்ன உதாரணம் வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகளினால் ஒருமுறை கைதுசெய்யப்பட்டதால் மட்டும் ரயாகரன் தியாகியாகிவிடமுடியாது. நியாமான போராட்ட வாதியாகி விடவும் முடியாது. ஷோபாசக்தியின் பழைய வாழ்க்கையை விமர்சிப்பதற்குமுன் ரயாகரன் தன்னைத்தானே சுயவிமர்சனம் செய்துகொள்ளவேண்டும். ரயாகரன் தான் ஒரு முன்னைநாள் ***NLFT*** உறுப்பினர் என்பதை ஏன் மறைக்கிறார். ( 2 ***SMG***யுடன் அலைந்த அவரது இயக்கம் சனங்களை மறந்து சனங்களைவிட உயர்வானவர்கள் தாங்கள் என்ற எண்ணத்தில் சனங்களால் வெறுக்கப்பட்டு சீரழிந்த கதை பலருக்கும் தெரியும். இவற்றை விரிவாக எழுதினால் பல பக்கங்கள் தேவைப்படும்.)

சுகித்தல் என்பதற்குச் ஷோபாசக்தி கூறிய விளக்கத்தை ஏற்க மறுத்து பாலியல் கருத்தே வழமை என்று கூறி வழமைக்கு (பழமைக்கு) கொடிபிடிக்கும் ரயாகரன் முன்பு எதற்காக அவரது *NLFT* இயக்கத்திற்காக மக்கள் கூடி வழமையாக வழிபடும் கோயில்களைக் கொள்ளையடித்தார். கொள்ளையடித்த பணத்தை வழமையாகப் புதைத்து வைத்தாரா அல்லது வழமையாகச் செலவு செய்தாரா? வழமையாகக் கடலில் கொண்டுபோய்க் கொட்டினாரா? இருபது வருடத்திற்கு மேலாக ஈழத்துச் சமுதாயத்தின் பழிவாங்குதல் துரோகிஎனக் கைது செய்தல் கொலைகள் ராணுவ வெறியாட்டங்கள் அனைத்தும் வழமையாகிவிட்டவைதானே! எதற்காக அதை மாற்ற முயற்சிக்கிறோம்? எமது சமுதாயத்துக்கொரு மாற்றுத் தீர்வை தேட முயற்சிக்கிறோம்? ரயாகரனின் கருத்துப்படி அதையும் வழமை என்று கூறிவிடவேண்டியதுதானே? சுகித்தல் என்றால் ரயாகரனுக்கு உடனடியாகப் பாலியல்தான் ஞாபகத்திற்கு வருகிறதுபோலும்! இப்படிப்பட்ட ரயாகரன் அவரது கூஜா அசோக் இருவரும் சேர்ந்து மீண்டும் ஒரு இயக்க வாதத்தைத்தானே புலம்பெயர் இலக்கியத்தில் நுழைக்க முயல்கிறார்கள்.

***LTTE*** என்னைக் கைதுசெய்தது, உமாமகேஸ்வரன் என்னைக் கொலை செய்ய முயன்றார் எனப் புலம்புவதைப் பார்த்தால் அந்தக்காலத்தில் ***LTTE***யினருக்கும்; ***PLOT***இனருக்கும் ரயாகரனைக் கைது செய்வதைவிட வேறு எந்த உருப்படியான வேலையும் இருந்ததில்லையோ? அதுவும் உமாமகேஸ்வரன் தன்னைக் கொலைசெய்ய முயற்சித்ததற்கான காரணத்தை ரயாகரன் எழுதும்போது ரயாகரனின் பொய் முகத்திரை கிழிக்கப்படுவதை ரயாகரன் உணரவில்லையா? உமாமகேஸ்வரன் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்த காலத்திலேயே சாதீயஒழிப்புப்போராட்டங்களில் ஈடுபட்டிருந்ததை நான்மட்டுமல்ல பலரும் அறிந்திருக்கிறார்கள். ரயாகரனும்
*"சாதியொழிப்பில் ஈடுபட்டதற்காக !!!"* உமாமகேஸ்வரன் ரயாகரனைக் கொல்லமுயன்றார் என்று ரயாகரன் கதையளப்பது வேடிக்கையாக உள்ளது. (ரயாகரன் அவர்களே வேறுகாரணங்களே இல்லையா? அல்லது உங்களால் வெளியில் சொல்ல முடியாத காரணங்களா?) உமாமகேஸ்வரனை உயர் குலம் என்று ரயாகரன் கூறி தான் அவரது உறவினர்என்று பிரகடனப்படுத்துவது ரயாகரன் தனது சாதித்திமிரை வெளிக்காட்டவே தவிர வேறெதற்காகவுமல்ல. (தனது சாதித்திமிரைக் காட்ட ஏன் அனாவசியமாக இறந்துவிட்டஒருவரை இழுக்கிறார்.)

***EPRLF*** இயக்கத்தை ***EP*** என்று தனது வழமையான (இலங்கையில் ஆதிக்கச் சாதியினர் ***EP*** என்பதன் மூலம் ஈழத்தின் பள்ளர்- பறையர் என்று தங்களுக்குள் குறிப்பிட்டுக் கொள்வதன்படி) ஆதிக்கச்சாதிச் சொற்பிரயோகத்தைப் பயன்படுத்தி தனது ஜாதீயத் திமிரை ரயாகரனாகவே வெளிப்படுத்தியுள்ளார். இவர்போன்றவர்களால் புலம்பெயர் இலக்கியம் பழமைவாத, ஜாதிய, வக்கிர, ஆணாதிக்க, அராஜக வழிமுறைக்குள் தள்ளப்படுவதையிட்டு மனம்வருந்தவேண்டியுள்ளது.

www.tamilarangam.net

இங்குள்ள சில புலம்பெயர் எழுத்தாளர்களுக்கு தாங்கள் உமாமகேஸ்வரனுக்கும் பிரபாகரனுக்கும் சமமானவர்கள் என்ற எண்ணம் எப்போதுமே இருப்பது தெரிகிறது. உமாவும் பிரபாவும் சில தவறுகளைச் செய்திருந்தாலும் அவர்கள் சாதித்தவற்றுடன் ஒப்பிடும்போது புலம்பெயர் எழுத்தாளர்கள் பிரபா, உமா ஆகியோரின் "கால்--- க்குக்கூட" ஒப்பானவர்கள் என்பதை உணரவேண்டும்.

திருவாளர் ரயாகரன்அவர்களே, அசோக்கு அவர்களே !

நீங்கள் உங்கள் சுயபுராணங்களையும் உங்கள் பழைய இயக்கவழிமுறைகளான காட்டிக்கொடுத்தல், திரிபுபடுத்துதல், உங்கள் கருத்துடன் மோதுபவர்களை மற்றவர்களைக்கொண்டு அழிக்க முயற்சித்தல் போன்றவற்றைவிட்டு புலம்பெயர் இலக்கியத்திற்கு உண்மையான சேவை செய்யவேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும். இதைமறந்து நீங்கள் தொடர்ந்து பழைய வழியில் சென்றால் இன்று சனங்கள் உங்களை மறந்தது மட்டுமல்ல, ஷோபாசக்தி உங்களுக்குக் கல்வெட்டுப்பாடியது மட்டுமல்ல புலம்பெயர் இலக்கியமே உங்கள் கருத்துக்களுக்கு கல்வெட்டுப் பாடிவிடும்.

சிவலிங்கம் சுரேஸ்குமார்

குறிப்புக்கள்:

உயிர்நிழல் 2 இற்கு அனுப்பப்பட்டு அவர்களால் நிராகரிக்கப்பட்ட இந்தக் கடிதம் மறைக்கப்பட்ட உண்மைகளாக வெளிவருகிறது. ரயாகரனின் கருத்துக்களுடன் ஒத்துப்போகாமல் அவரது கருத்துக்களை விமர்சித்ததால் இக்கடிதம் உயிர்நிழல் குழுவினரால் நிராகரிக்கப்பட்டது. இன்று மார்க்ஸிசம் பேசிக்கொண்டிருக்கும் ரயாகரனும் உயிர்நிழல் குழுவினரும் மற்றும் அறிவுஜீவிகள் என்று தம்மை அழைத்துக்கொள்ளும் சிலரும் ஒரு தனிமனிதனின் விமர்சனத்தைக்கூட, அம்மனிதனுக்கு விமர்சிப்பதற்குரிய சுதந்திரமிருப்பதைக்கூட மறுக்கின்றனர். இவர்கள் தான் இன்றைய இடதுசாரிகள்!

இப்படிப்பட்ட சந்தர்ப்பவாதிகளிடையே அகப்பட்டதனால்தானோ என்னவோ பாட்டாளி மக்களுக்காய் மார்க்ஸினால் படைக்கப்பட்ட மாாக்ஸிசம் இன்று பாட்டாளி மக்களுக்கு அருகில்கூடச் செல்லமுடியாதுள்ளது. தாங்கள் மார்க்ஸிஸத்தைத்தெளிவாகக் கற்காததுமட்டுமல்ல மாாக்ஸிஸத்தை தமது மிகக் கேவலமான அரசில் அபிலாசைகளுக்கு சந்தர்ப்பத்துக்குத் தகுந்தவாறு முன்னுக்குப்பின் முரணாகப்பயன்படுத்தி மாக்ஸிஸத் தத்துவத்தையே சீரழிக்க முயல்கின்றனர்.

உயிர்நிழல் 1இல் வந்த ரயாகரனின் கடிதத்திற்கு நான் அனுப்பிய விமர்சனம் பிரசுரிக்கப்படாமையினால் எனக்கு உயிர்நிழல்மீது சில சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளது:

1. ரயாகரனின் சமர் போன்று உயிர்நிழல் சஞ்சிகையும் ரயாகரனின் பினாமிகளால் நடத்தப்படும் பத்திரிகையா? இவ்வளவு பணச்செலவில் ரயாகரனுக்கு இரண்டு பத்திரிகைகள் தேவையா?

2. இலங்கையில் கருத்துச்சுதந்திரம் பறிக்கப்படுவதாக அந்தக்காலத்தில் நோட்டீஸ்ஒட்டிய இவர்கள் இங்கு ஒரு தனிமனிதனின் கருத்தைப் புதைகுழிக்கனுப்பக் கைகோர்த்துச் செயற்பட்டு தாங்கள் மாக்ஸிஸப்போர்வை போர்த்திய / பாஸிஸ்டுக்கள் என்பதை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளார்களா?

3. ரயாகரனைப்போல் ஏகவசனத்தில் நீ, நான், நாயே, பேயே, துரோகி என்று திட்டிக் கடிதமெழுதினால்தான் ஒரு "கிக்" ஆக வியாபாரம் நடக்குமென்ற நோக்கமா?

எது எப்படியிருப்பினும் நிதானமாக செயற்படுவோமெனில் உண்மைகள் உறங்குவதில்லை.

சிவலிங்கம் சுரேஸ்குமார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடிதம்

சுகன்

பேரறுவையின் சிகரத்தைத்தொட்ட "தேசத்தின் குறிப்புக்கள்" எனும் அபத்த அரசியல் கட்டுரைக்கு வந்த எதிர்ப்பு புகலிடம் பிரசித்தமானது. பத்துமோ பத்தாதோ என்று தாம் எழுதிய அபத்தத்தை சரிநிகர் மூன்றாவது இதழிலேயே திருப்பியும் பசை பூசி ஒட்டி மறுபிரசுரம் செய்ததை என்னென்று சொல்ல.

- *1 சிவசேகரம் கத்திப்போட்டுக் கிடக்கட்டும்.* கட்டுரையாளர்கள் தங்கள் அக முற்சாய்வுகளை மற்றவர்கள்மீது அரைவேக்காட்டு விளக்கங்களைத் தருவது தவிர்க்கவேண்டியது.சரிநிகர் அரட்டைக்கும் ஆராய்வுக்குமிடையில் வேறுபாடுகாணுமாயின் நல்லது.

www.tamilarangam.net

[illegible]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடிதம்.

சுகன்

சிலகடிதங்கள் சரிநிகர் அலுவலகத்திற்கு ஆசிரியர் பாலகிருஸ்ணன் எனும் முகவரியிடப்பட்டு வந்ததைக் காணச்சகிக்காது யாழ்ப்பாணத் தமிழுணர்வு வெதும்பிக் கொதித்தது. உடனேயே கனடாவுக்குச் சென்றும் தன்னை அகதியாக அடையாளப்படுத்த அருவருப்படையும் சேரனே இதற்குப் பொருத்தமான ஆள் (அடுத்தது சிவத்தம்பி) என்ற நீண்டகால அனுபவத்தின் விளைவாக சேரனை எப்படி இதற்குள் கொண்டுவருவது என யோசித்தவேளையில் பாலகிருஸ்ணன் வெளியீட்டாசிரியர் எனவும் பிரதம ஆசிரியர் சேரன் தான் என்றும் கதை பரப்பி பின்னர் உத்தியோகபூர்வமாக்கியது. புகலிடத்தில் இம்மாற்றம் அருவருப்பானது எனக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. பாலகிருஷ்ணனுக்குஇல்லாத தகுதியானது அவா யாழ்ப்பாணத்து உணர்வெழுச்சியைப் பிரலதிபலிக்கிறாரில்லையென்றும், சர்வதேசரீதியில் யாழ்ப்பாணத்து உணர்வெழுச்சியைப் பிரதிபலிக்கும் அச்சொட்டான பிரதிநிதி சேரன்தான்என்றும் விக்கி உயர்நீதிமன்றம் இறுதித்திர்ப்பு வழங்கியது. ஆக "பிரதம ஆசிரியர்" என்பதற்கான நடைமுறை அகராதி அர்த்தம் இதுவாக இழிந்துபோயிற்று.

அதன் பின்வந்த புனைபெயர்களும் தலைப்புக்கள் சிலவும்:

- அளவெட்டியான்
- செம்பாட்டான்
- மகாஜனன்
- கலைகளில் ஊறிச் சிவந்த யாழ்ப்பாணம்
- அம்பனைக்கு அப்பால்
- உயனைப்பனங்கூடலும் பினாக்கைக் குளமும்.

www.tamilarangam.net

# தமிழீழம் தமிழ்பேசும் தொழிலாள வர்க்கத்தின் கோஷமா?

ப.வி. சிறீரங்கன்

இலங்கையில் தமிழ்பேசும் தொழிலாள வர்க்கத்தினதும் சிங்கள தொழிலாள வர்கத்தினதும் புரட்சிகர வர்க்க முனைப்பு மாறுபட்டதாகும். அடிப்படையில் தொழிலாளர்களாகிய இவ்விரு இன மக்களும் தமது புறநிலைத் தாக்கங்களில் மாறுபட்ட வகையில் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். தமிழர்கள் இனரீதியாகவும் - பொருளாதார அடிப்படைச்சுரண்டலாலும் பாதிக்கப்படுதிறார்கள். சிங்கள தொழிலாளவர்க்கம் பொருளாதார அடிப்படைச்சுரண்டலால் பாதிப்புக்குள்ளாகிறார்கள்.

இவ்வடிப்படை வித்தியாசத்தின் போக்கால் தழிழ் பேசும் தொழிலாளவர்க்கத்திடம் அதன் வர்க்க முனைப்பு இனவிடுதலை உணர்வுடன் பின்னிப்பிணைந்து பல புரட்சிகர நடவடிக்கைகளை கைக் கொள்ள முனைந்தது. ஆயினும் இப்புரட்சிகர நடவடிக்கைகள் யாவும் தமிழ்குட்டிமுதலாளி வர்கத்தின் நலன்களுக்கு பாதுகாப்பு அளிக்கவே பயன்படுத்தப்பட்டது! சிங்களம்பேசும் தொழிலாள வர்க்கம் இனவாத ரீதியான அடக்குமுறைக்கு உள்ளாகாத காரணத்தால் அதனுடைய புரட்சிகர வர்க்க குணாம்ஸம் திடீரென எழும்பும் தீயாகவின்றி படிப்படியாக வளரும் நிலையில்தாமுள்ளது! எது எப்படியிருப்பினும் இவ்விரு மொழிபேசும் தொழிலாளர்களும் தொழிலால் ஒன்றுபட்டவர்கள். இவ்வித நோக்கு நிலையில் இவர்களினது (எமது) பிரச்சனை பொதுவானதாகும். இவ்விதக்கண்ணோட்டத்துடன் தமிழீழக்கோஷத்தின் உள்ளடக்கத்தை விளங்கிக்கொள்ள முனைகிறேன்

தமிழ்பேசும் மக்களாகிய எங்கள் மத்தியில் இன்றும் தமிழீழம் கிடைக்குமா? தமழீழ வடுதலைப் போராட்டத்தை எந்த இயக்கம் முன்னெடுக்குது? அந்த இயக்கம்தாம் உண்மையானது, இதுகள் சரியில்லை, இந்திய இராணுவம் போனதும் தமிழீழப் போராட்டம் தொடரும் . என்று பேசியும் நியாயப்படுத்தியும் வருபவர்கள் இல்லாமலில்லை! எனவே, இன்றய இவ் இருழ்சூழ்ந்த நிலைமையில் தமிழீழம் என்ற இக்கோஷம் உழைக்கும் தொழிலாளவர்க்கத்தின் நலன்களை விடுதலையைப் பெற்றுத்தருமா என்பதை தொழிலாளவர்க்கம் புரிந்து கொள்ளவில்லை என்றே எண்ணவேண்டியுள்ளது. தமிழீழக் கோஷமானது தமிழ் குட்டிமுதலாளி வர்க்கத்தினால் முன்வைக்கப்பட்டு அவர்களின் நலன்களுக்காகவே தேசிய விடுதலைக் குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டன. இதன் உள்நோக்கங்களை:

1-. தமது பிரதான உற்பத்திப் பண்டங்களை தாமே நிர்ணயித்த ஒருவிலையை நியுவமுடியாது இருப்பது.
2- தமது வாரிசுகளின் உயர்கல்வி சிங்கள அரசால் தரப்படுத்தப்பட்டது.
3- தமது பொருளாதார வசதிக்கேற்ப பாரிய அல்லது சிறிய கைத்தொழில் நிறுவனங்களைத் தொடங்குவதற்கு இன ரீதியான முட்டுக்கட்டையை சிங்கள முதலாளிகளின் அரசு போட்டது.
4- தமது நில உரிமைகளை சுவீகரிப்பு என்ற போர்வையில் சிங்கள அரசால் பறிக்கப்பட்டது.(உதரணம் டொலர்பாம், கெம் பாம், நீதிராஜாவின் கையிலிருந்து பறித்தெடுத்தது சிங்களஅரசு.)
5- சிங்கள முதலாளித்துவ அரசில் "அதிகார வர்க்கமாக" இருப்பதற்கு முட்டுகட்டையாக "சிங்களப் புலமை " ஏற்படுத்திய தேர்ச்சியின்மை என்ற தரப்படுத்தல்.
6- தமது கல்வியிலும் குறைவான சிங்களவர் உயர் அதிகாரிகளாக இருந்து தம்மை கட்டுப்படுத்துவது.
7- தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களிலுள்ள மூலவளங்களை தாமே தமிழ்குட்டி முதலாளியாயின் சுரண்டியுண்ணஆசை கொண்டது.
8- இலங்கையில் ஏற்பட்ட இனங்களுக்கிடையிலான முதலாளித்துவ வளர்ச்சியில் சிங்கள அரசு தம்மை தலைவெட்ட

www.tamilarangam.net

எத்தனித்து செயற்பட்டதால் அதை தடுப்பதற்கு.

மேற்படி எட்டுப்பிரிவாக வகுக்கலாம். இவ் நோக்கங்களை வென்றெடுப்பதற்காகவே தமிழ்குட்டி முதலாளிய வர்க்கத்தால் தமிழீழம் என்ற கோஷம் வைக்கப்பட்டது. இங்கு கவனிக்கத்தக்கது என்னவெனில், தமிழீழ கோஷத்தை தமது நலன்களுக்காகப் பிறப்பித்து அதை தொழிலாள வர்க்கமாகிய எம் மத்தியில் , எமக்கு விடுதலை பெற்றுத்தரும் கோஷமாக பிரச்சாரம்செய்து எமது குருதியில் தனது ஓரளவு பாதுகாத்து விட்டது தமிழ்குட்டிமுதலாளிய வர்க்கம் என்பதாகும்!

மேற்கூறிய பிரச்சனைகளுக்கு பாராளுமன்ற அரசியல் வழிமுறையில் (பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படுவதை ஆராய்ந்தால் அங்கு தரகு முதலாளிகளும் குட்டிமுதலாளிகளும் தமது முரண்பாட்டை தீர்க்க விவாதிப்பது பிரதிபலிப்பதை காணலாம். மற்றும்படி மக்களின், அதாவது உளைக்கும் மக்களின் பிரச்சனைகள் விவாதிக்கப்படுவது கிடையாது) தீர்வுகாணமுடியாத பட்சத்தில்தாம் தமிழ்குட்டிமுதலாளிய வர்கத்தைப் பிரதிநிதிப்படுத்தும் அல்லது அவர்களுக்கு குடைபிடிக்கும் கட்சிகளால் "தமிழீழம்" என்று பிரகடனப்படுத்தப்பட்டது. பின்னாளில, சிங்கள முதலாளித்துவ அரசால் பராளுமன்ற பதவிகள் பறிக்கப்பட்டு ஓட்டுக்கட்சிகள் விரட்டியடிக்கப்பட்டதால் தமிழ்குட்டிமுதலாளிய வர்க்கம் ஆயுதக் குழுக்களைத்தோற்றுவித்தது. அக்குழுக்களுக்கு தமிழீழக் கோஷத்தை தாரக மந்திரமாக பிரயோகிக்கச் சொல்லி அப்பாவி தமிழ்பேசும் தொழிலாள வர்க்கத்தின் குருதியில் தனது நலன்களுக்கு சிங்கள அரசோடு பேரம்சேசி வருகிறது.

இன்றய நிலையில் "தமிழீழ விடுதலை புலிகள்" சிங்கள அரசோடு பேரம் பேசி ஒத்து ஆட்சியமைக்க தம்மை அரசியல் ஓட்டுக்கட்சியாக பதிவு செய்ததை இதற்கு அப்பட்டமான உதாரணமாகக் கொள்ளலாம். மற்றைய போலி விடுதலைக் குழுக்கள் யாவும் இந்திய மேலாதிக்கத்தின் எடுபிடி கூலிக்குழுக்கள் என்பதை புரியக்கூடிய வகையில் வரலாறு சுட்டி நிற்கிறது. இவர்கள் ஏகாதிபத்திய முதலாளித்துவத்தின் கைகூலிகளும்கூட!

தொழிலாள வர்க்கத்தினது விடுதலைக்கு தனது, வாழ்வையே அர்ப்பணித்து மரித்த, பாட்டளிகளின் ஆசான் கார்ல் மார்க்ஸ், தொழிலாள வர்க்கத்தின் பிரச்சனைகளை விஞ்ஞானபூர்வமாக ஆராய்ந்து தந்ததுதாம் மார்க்சிசமாகும். அந்த மார்க்சிசத்தின் கூற்று என்னவென்றால், தேசிய இனப்பிரச்சனை தேசியவடுதலை என்பதெல்லாம் தேசிய முதலாளித்துவத்தின் கோஷமே தவிர உழைக்கும் மக்களின் கோஷமல்ல. மேலும், நாடு,மொழி,இனம்,மதம்,ஆகியன மனிதனுக்குப் பிறப்பின் காரணமாகமாகத் தற்செயலாக வந்தமைந்தன என்றும் இவற்றை மனிதன் எளிதில் மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் கூறுகின்றது மார்க்சிய விஞ்ஞானம்.

அதாவது, ஒப்பற்ற மனிதகுலத்திலிருந்து மனிதன், எந்தக்காரணத்துக்காகவும் தன்னை தனி நிலையிலும் சரி ஒதுக்கியோ, ஒதுங்கியோ வாழக்கூடாது! மாற்றக்கூடியனவெல்லாம் உயிரைச் சார்ந்தவையல்ல- பந்தங்களல்ல! ஆகையினால், ஒரு மனிதன் எல்லா மொழிகளையும் கற்கவும் முடியும், எல்லா நாட்டு மாந்தனாகவும் முடியும். ஆதலால், நாடு, மொழி,இனம்,மதம், ஆகிய வேறுபாடுகளை மையமாக வைத்து உலகத்தைப் பிரிக்கப்படாது! இயற்கையில் அமைந்த தொழில் செய்யும் ஆற்றல், தொழில் மூலம் உலகத்தை இயக்குதல், செய்யும் தொழில் மூலம் உலக இயக்கத்திற்கு வரலாற்றுக்கு உந்துசக்தியாக இருத்தல் ஆகியன அனைத்துலக மானுடஜாதிக்கும் பொதுமை.

எனவே, உயிர்குலத்தை ஒன்றிணைப்பது தொழில். இதுதாம் இனமுரண்பாட்டைத்தீர்க்கும் வழி. மார்க்சியத்தின் அடிப்படை உண்மையும் இதுவே. எனவே, இன்று தமிழ் பேசும் தொழிலாளர்களாகிய நாம் " தமிழீழம்" எனும் கோஷம் எங்கள் விலங்குகளை அகற்றாது எனபதையும் தமிழீழ கோஷம் தமிழ்குட்டிமுதலாளிகளின் நலனுக்காக நம்மை பலி கொடுக்கப்போடும் கோஷம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அத்தோடு, இன முரண்பாட்டை பெரிது படுத்திக் கூக்குரலிடும் முதலாளித்துவ வர்க்கத்தின் ஒவ்வொரு செயலையும் துல்லியமாக விளங்கிக் கொண்டு, சிங்களம் பேசும் தொழிலாளவர்க்கத்தோடு ஐக்கியமாகி எங்களது பொது எதிரியான சிங்கள, தமிழ் அரசமுதலாளித்துவத்தையும் அதன் ஆதிக்கத்தையும், அராஜகத்தையும், உடைத்தெறிந்து இலங்கையில் ஒரு சோசலிச அரசை நிறுவ வேண்டியது வரலாற்றுக் கடைமையாகும்.

இந்த நிலையில், இலங்கையைப் பொறுத்த வரையில் தமிழ் மக்களின் முதல் எதிரி, "தமிழ் இன வெறியைத் தூண்டி தமது நலன்களை பாதுகாக்கும் குட்டிமுதலாளித்துவ போலி ஓட்டுக்கட்சிளும், விடுதலை இயக்கங்களுமாகும்" இரண்டாவது எதிரி சிங்கள இன வெறியர்களை வளர்த்தெடுக்கவும், அவர்களுக்கு தலைமை தாங்கவும் அமைக்கப்பட்ட சிங்கள அரசமுதலாளித்துவஅரசாகும்! இவைகளே தமிழ்-சிங்கள தொழிலாளவர்க்கத்தின் பொது எதிரிகளாகும்.

இந்த பொது எதிகளுக்கு எதிராக தொழிலாளவர்க்கத்துள் புரட்சிகர சக்திகள் வளராமலில்லை. தமிழீழ விடுதலைக் கோஷம் போட்டு தமிழ்பேசும் தொழிலாளவர்க்கத்தை ஏமாற்றி அவர்களின் தியாகத்தை தமக்கு சாதகமாக்கிய போலி ஆயுதக் குளுக்களுக்கெதிராக தமிழ்பேசும் தொழிலாள வர்க்கத்துக்குள் முற்போக்கான -சமூக மாற்றத்திற்கான சுரண்டல் சமுதாயத்தை மாற்றி பொதுவுடமை மலர பாடுபடும் அமைப்புக்கள் மலராமலில்லை. அவை, தம் வரலாற்றுக்கடனை சரிவரச் செய்யத்தயாராகி வருகின்றன. அதுபோல் மேற்கூறிய பொது எதிரிகளுக்கு எதிராக சிங்களம் பேசும் தொழிலாளி வர்க்கத்தினுள்ளும் பல சக்திகள் வளர்ந்து கொண்டுதாம் வருகின்றன. தமிழ் பேசும் தொழிலாளி வர்க்கத்துக்குள் சமூக மாற்றத்தை முன்னெடுக்கும் சக்திகள் வளரும் அளவுக்கு சிங்களம் பேசும் தொழிலாளவர்க்கத்துக்குள் இவ் வகைச் சக்திகள் வேகமாக வளராமல் இருக்கலாம். அது,நான் மேற்குறிப்பிட்டது போன்று அவர்கள் இனரீதியாக அடக்கப்படாதபடி வளர்ச்சி பெற்றே வருகிறார்கள். என்பதுதாம் உண்மை.

www.tamilarangam.net

இன்று, சிங்களம்பேசும் தொழிலாளவர்க்க மக்களும் சிங்கள அரச முதலாளித்துவ ஆட்சியால் மிகவும் என்றுமில்லாதவாறு, அடிப்படை மனித உரிமைகள், ஜனநாயக உரிமைகள், முதலியன மறுக்கப்பட்டும், பொருளாதார ரீதியில் மிக மோசமான முறையில் சுரண்டப்பட்டும், லஞ்சம், ஊழல் ஏனைய சமுக அடக்குமுறைகளுக்கும், பாசிச கொலைவெறிக்கும் ஆளாவது தொழிலாளவர்க்கம்( சிங்கள தொழிலாளவர்க்கம்) தவிக்கிறார்கள். தென் இலங்கையில் நடைபெறும் அரசுபாசிச நடவடிக்கைகள் மேற்கூறிய விடையங்களை உறுதிப் படுத்துகிறது, இன்று!

இந்த நிலைமையிலும், தமிழ்பேசும் தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியம் பற்றிக் கவலையுறும் நிகழ்வுகள் நடைபெறாமலில்லை. அதாவது,சிங்களம் பேசும் தொழிலாளர்களை பெரும்பான்மை இனம் என்று சாட்டி அவர்களது அடிப்படைப் பிரச்சனைகளை திசைதிருப்பி தமிழ்பேசும் தொழிலாளவர்க்கத்துடன் இணையவிடாது தடுக்கும். இராஜதந்திரத்தை சிங்கள அரசும், தமிழ்பேசும் தொழிலாளர்களிடம் சிறுபான்மை இனம் என்ற உணர்வைக் கூறி எழும் பிரச்சனைகளை திசைதிருப்பி சிங்களம் பேசும் தொழிலாளர்களுடன் இணைய விடாது தமிழ் போலிஇயக்கங்களும் செய்துவருகின்றன. என்றபோதிலும், இவர்களது சூழ்சிகளை முறியடித்து தொழிலாளர்வர்க்கம் ஒன்று பட்டு போராடினால் எமது எதிரிகளை முறியடிப்பது ஒன்றும் முடியாதகாரியமல்ல.

என்ற போதிலும், தமிழ்பேசும் தொழிலாளவர்க்கத்திடம் இன்னும்.... இன்னும் ஆழமாக ஊறியிருப்பது குட்டிமுதலாளியப் பண்புகள்தாம் தொழிலாளியாக இருந்து கொண்டே முதலாளியாகக் கனவு காணும் போக்கானது சிங்களம் பேசும் தொழிலாளர்களை விட நம்மிடம் அபரிதமாகவே இனம் காணமுடியும் இவ்விதப் போக்கை தமக்கு சாதகமாக்கிய "குட்டிமுதலாளிவர்க்கம்" தமிழீழம், தமிழீழம் என்று கூக்குரலிட்டும், இனம், மொழி, பண்பாடு, மதம் எனப் பொய்மைக் கோஷங்களால்தமக்கு சேவகர்களாக தமிழ்பேசும் தொழிலாளிய வர்க்கத்தை கட்டிப்போட்டுள்ளது என்பது மறுக்கமுடியாத உண்மை. மறுபுறம் எந்த முதலாளியத்தின் இராஜ தந்திரத்தையும் விட மிகவும் கூர்மையாக தமிழ்பேசும் மக்கள் சமுகமும், இந்திய மக்கள் சமுதாயமும் தொழிலாளவர்க்கத்தை தொழில் அடிப்படையில் இணையவிடாமல் தடுத்து வர்க்க உணர்வை மழுங்கடிக்க "சாதிப் பிளவுகளை"ஏற்படுத்தி எம்மை பிரித்து வைத்திருக்கின்றது. இந்த சாதிப்பாகுபாடு தொழிலாளவர்க்கம், முதலாளித்துவச் சுரண்டலை முறியடித்து பொதுவுடமை அமைப்பை உருவாக்கி விட முடியாமல் தடுத்து வருகிறது. ஆயினும் இவ் பாரிய சூழ்ச்சியை தமிழ்பேசும் தொழிலாளி வர்க்கமானது புரிந்து வருகிறது என்பதும் உண்மை. இந் நிலையில் தமிழ் பேசும் தொழிலாளவர்க்கமும் சிங்களம் பேசும் தொழிலாளவர்க்கமும் இணைந்து ஐக்கியமாகி இலங்கை முதலாளித்துவ வர்க்கத்தை முறியடித்து, சுரண்டல் அமைப்பு முதலாளிகளை இல்லாது ஒழித்து பொதுவுடமை அமைப்பை உருவாக்கி இலங்கையில் வாழும் சகல உழைக்கும் மக்களும் பூரண சுதந்திரத்துடன் வாழ தொழிலாவர்க்கப் போராட்டத்தை முன்னெடுப்பது வரலாற்றுகடமையாகும். இந்த கடமையை முன்னெடுப்பதற்கு சிங்களதொழிலாள வர்க்கத்தின் மத்தியில் இனவாத அரசுக்குகெதிரான போராட்டத்தை முன்னெடுக்கக் கூடிய சக்திகளையும் புதிய சமூக மாற்றத்தை வேண்டிப்போராடும் சக்திகளையும் இணைத்து இன்னும் பலமடைந்து வளர்ச்சி பெற்றுவியாபிக்கக் கூடிய நிலையை தமிழ் பேசும் தொழிலாள வர்க்கத்துள் பலமடைந்துள்ள புரட்சிகர சக்திகள் ஏற்படுத்தி அவர்களோடு இணைந்து கொள்ளவேண்டும். இந்த வரலாற்று தேவையை நிராகரித்து உழைக்கும் மக்கள், தமிழ்பேசும் தொழிலாளவர்க்கம், "தமிழீழம்" என்ற போலி கோஷத்திற்குள் விழுந்து இயங்குவது, மாயைக்குள் நின்று "தமிழீழம்தாம்" எமது தாகம் என்று தம் தியாகத்தால், முதலாளிகளை வாழவைக்கப் போராடுவார்களேயானால், முழு சிங்கள மக்களையும் எமது பொது எதிரியான முதலாளித்துவ சிங்கள பேரினவாத அரசுக்குப் பின்னால் அணிதிரளச்செய்து, மிகப்பெரிய அரசியற் துரோகம் இளைப்போம் எமக்கே!

## குறிப்பு:

இந்தக் கட்டுரை 1990 ஜனவரி - பெப்ரவரி காலப்பகுதியில் "பள்ளம்" இதழுக்காகக் கொடுக்கப்பட்டு வெளியிட முடியாது எனப்பட்டது.

"ஐரோப்பியர் கட்டமைப்பால்...."

ப.வி. ஸ்ரீரங்கன்

எழுதிய கட்டுரை கிடைத்திருக்கிறது

கையெழுத்தில் வந்த

உட்பட ஏனைய ஆக்கங்கள் முழுவதும்

அவரே ஒப்படைத்தார்

இருப்பும்.

அக்கட்டுரைக்கேற்ப பக்கங்கள் இல்லை.

www.tamilarangam.net

# மாட்டுப் பைத்தியமும் மார்க்ஸீயமும் முப்பது வெள்ளிக் காசுகளும்.1

சுகன்

ஒருநாள் / எமதுநாட்டின் / அரசிலற்ற அறிவுஜீவிகள் / மிகவும் எளிமையான / எமதுமக்களால் / விசாரணை செய்யப்படுவார்கள் என்ற ஓட்டோ ரெனே காஸ்டிலோ (தமிழில் : அமரந்தா)வின் கவிதையைப்பார்த்தவுடன் எனக்கு ஜமுனாராஜேந்திரனின் ஞாபகம் வந்தது.

✸ ✸ ✸

என்னே ஆச்சரியம் உள்ளே யமுனா

✸ ✸ ✸

இப்பதான் சில ஆண்டுகளுக்குமுன்னர் நோர்வே - சுவடுகள் சஞ்சிகையில "ஈழத்து இலக்கியம் மட்டுமல்ல புலம்பெயர் இலக்கியமும்2 தனது அரசியல் நிலைப்பாட்டிற்காகக் கசாயம் குடிக்கவேண்டும்" என்று எழுதத்தொடங்கி ஈழமுரசில் புலிகளின் சினிமா நிருபராக வேலைபார்த்துக்கொண்டிருந்தபோதும்

✸ ✸ ✸

"அரசியற் பிரச்சினைகளினின்றும் எம்மைத் தூரவிலத்திக் கொண்டோம்" என்று இருபதாம் நூற்றாண்டுத் தமிழனில் (லண்டன்-சித்திரை-1997) தொகுப்பாளர் தலையங்கம் எழுதியபோதும்

✸ ✸ ✸

ஜமுனாராஜேந்திரனை ஈழத்தமிழர்கள் மிகவும் பரிதாபத்துக்குரிய ஜீவனாகத்தான் கணித்துவந்தார்கள். அன்பாகவும் பரிவுடனும் நாமும் தேடாவிட்டால் வேறுயார்தான் ஆறுதல் தருவார்கள் என்று பராமரித்தார்கள். எத்தனையோ விமானக் குண்டுவீச்சுக்களைப்பார்த்த எமக்கு ஜமுனாராஜேந்திரனைப்பார்ப்பது ஒன்றும் அவ்வளவு கஸ்ரமானதாக இல்லை.

1-A தலித் எழுச்சி தொடங்கியது

"ஐயோ அம்மா! நான் மர்ாக்ஸிஸ்ட்" என்று சாமம் 1.35ற்கு எழும்பிக் கத்தத்தொடங்கியபோது அருகில் உறங்கிக்கொண்டிருந்த சிவானந்தன், கென்லோச், பென் ஓக்ரி எல்லோரும் திகைத்துத்தான் போனார்கள். ஜமுனா மார்க்ஸியம்3 இப்படித்தான் தொடங்கியது. லண்டனில் சிவசேனைக்கிளையும் தொடங்கியது.

✸ ✸ ✸

1-B தலித்திய இயக்கங்களை "மேற்கத்திய நாடுகளிடம் நிதியுதவி பெறுபவர்கள்" என்றும் எதிர்ப்புரட்சியாளர்கள் என்றும் "அங்கைசாட்டி இங்கை காட்டும்" அடிக்குறிப்பு 8 ல் எழுதும் யமுனாராஜேந்திரன் அய்க்கிய ராச்சியத்தின் கௌரவ அகதியாக இருப்பது அனேகமாக எல்லாருக்கும் தெரியுமென்பதால் அனைத்திந்திய அளவில் அறியப்படாத இன்னொரு விடயத்தையும் சொல்லலாம். மாட்டுப்பைத்திய நோய் வந்தபோது ஆர். எஸ். எஸ். அம்மாடுகளைத்தான் பொறுப்பேற்க விரும்பியதும் பிரிட்டன் அதற்கு மறுத்ததற்கும் இடையில் ஜமுனா ராஜேந்திரன் ஆர். எஸ். எஸ்.இன் தொடர்பாளராக இருந்தார் என்ற புகலிட செவிவழிச் செய்தி4 அவ்வளவுதூரம் நிராகரிக்கக்கூடியதல்ல.

2. தனிமனிதராகவோ / குடும்பமாகவோ / குழுவாகவோ யாராவது பார்ப்பனீய இந்து மதத்திலிருந்து விடுதலை வேண்டினாலோ, பெற்றாலோ, மதம் மாறினாலோ ஜமுனா மாரக்ஸியத்திற்குப் பொறுக்க ஏலுதில்லை. ஒரிஸாவில் குழந்தைகளுடன் எரித்துக் கொல்லப்பட்ட பாதிரியார், மத்தியப்பிரதேசத்தில் தாக்கப்பட்ட கிறீஸ்தவர்கள் , குஜாராத்தில் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட கன்னியாஸ்தரீகள் எல்லோரும் ஜமுனாராஜேந்திரன் லண்டனிலிருப்பது தெரியாமலே செத்துப்போனார்கள்.

www.tamilarangam.net

 கூட்டமாக மதம்மாறுபவர்களைக் கூட்டமாகவே எரித்துக்கொல்ல எப்போதோ தயாராகிவிட்டார் யமுனா.
 இந்துப்பாசிசத்திற்கும் ஜமுனா மார்க்ஸியத்துக்கமிடையில் யாராவது ஆறுவித்தியாசங்களைக் கண்டுபிடிக்கமுடியுமா?
 "மதமாற்றங்கள் ஒருவிவாதம்" (துக்ளக்-பெப்ரவரி1999) இதழ்களில் இல.கணேசன் , சோ கருத்துக்களுக்கும் ஜமுனாராஜேந்திரனின் சிந்தனைக்கும் ஏதேனும் ஒரு வித்தியாசம் கூறமுடியுமா?

மீண்டும் 2 "தமிழீழத்திலிருந்து" புலிகள் முஸ்லிம்களை விரட்டி அடுத்த மில்லியனியம் ஆகப்போகிறது. அதைக்கேட்கத் துப்பில்லாத ஜமுனாராஜேந்திரன் "இஸ்லாமிய சாதிவித்தியாசத்திற்கும் இஸ்லாமியப் பெண்ணடிமைத்தனதத்திற்கும், எதிராகக் கேள்விஎழுப்பக் கோருவது! எவ்வளவு மோசமாகத்தன்னை ஒரு இந்துத்துவ ஆண் என்கிறார்!

நா.கண்ணன்5 கிறிஸ்தவ சாதிப்படிநிலைபற்றிக் கதைக்கிறாராம். பாவம் கண்ணன். "என்னசெய்வது நான் ஐயங்காராகவே பிறந்துவிட்டேன்" என்று "நேர்மையாகவே" சொல்பவர் கண்ணன்.
நா.கண்ணன் அய்யங்காரும் ராஜேந்திரக் கவுண்டரும் "ஆடுகள் மழையில் நனைகின்றன" என்கின்றன(ர்). பற்களின் கோரத்தனத்தைப் பார்கவே பயமுறுத்துகிறது.

இறுதியாக - (1) நா.கண்ணன் புலம்பெயர் தமிழனின் தூரநோக்கிலிருந்து பார்க்கிறாராம்.(கட்டுரை முதற்பந்தி)

நா.கண்ணன் இந்திய விமர்சகராம் (இரண்டாவது அடிக்குறிப்பு பக்கம் 26)

(O) உளறல்களுக்கு ஒரு எல்லையே இல்லையா? அல்லது இதுவேதான் எல்லையா??
(- சுகன் - பிரான்ஸ்)
17 -04- 1999

அடிக்குறிப்புக்கள்:

(1) முப்பது வெள்ளிக் காசுகள் (இது ஒரு ஈழமுரசுக் கட்டுரைக்குப் பெறுவதாக நம்பப்படும் *கையூட்டுத்தொகை*) : 500 பிரஞ்சுப் பிராங்குகள்
: 500 ஓ 6.98 : 3,490.00 இந்திய ரூபாய்கள்.
: 75.8 ஈரோக்கள்

( இங்கு குறிப்பிடப்பட்ட நாணயமாற்று விகிதங்கள் அனைத்தும் 17 . 04 . 1999 அன்றையTF2 தொலைக்காட்சிச்சேவையின் teletext படி பாரீஸில் கணிக்கப்பெற்றது.)

(2) இந்துப்பாஸிஸத்தின் கொடுரத்தை மறைப்பதற்காக இஸ்லாம் என்றும் கிறிஸ்தவம் என்றும் பிரச்சனையைத் திசைதிருப்பும் ஜமுனாராஜேந்திரனுக்கு சொல்வதற்கு ஒன்று இருக்கிறது. "பீடியை இழுத்தால் புகைவரும் ஆனால் புகையை இழுத்தால் பீடி...!" (நன்றி: விக்கிரமன்)

(3) oumou sangaré
Grandde cantatrice malienne de Wassoulioou

(4) ulrich Ramé
Quand il n'écoeure pas vles attaque nts il ravit les abnnés
Porte de Clignancourt, Porte de Orleane

(5) "தோப்பூர் ரஸ்தாவில் ஒரு கொலை" மர்மக் கதைமன்னன் நாஞ்சில் பி.டி. சாமி. ப:109

*10 -05 -99* திங்கள் *19.03.* **GARE DU NORD** ரயில் நிலையத்திலிருந்து காலக்குறி கானுடன் ஓர் தொலைபேசி உரையாடல்.

? சுகன்: வரலாறும் புனைவும் ஜமுனாராஜேந்திரனின் காலக்குறி கட்டுரைக்கான எதிர்வினை மாட்டுப் பைத்தியமும் மார்க்ஸீயமும் முப்பது வெள்ளிக் காசுகளும் கிடைத்ததா?
காலக்குறி கான் பதில்: ஆமா கிடைத்தது.

www.tamilarangam.net

? சுகன்: போடுறீங்களா?
காலக்குறி கான் பதில்: ஆமா போடலாம். ஆனா அவரை அப்படித் தாக்கமுடியாதில்லையா?

? சுகன்: இல்லை. மிகவும் ஸொா:.ப்ராகத்தான் தாக்கியிருக்கிறன்.
காலக்குறி கான் பதில்: சிரிப்பு

? சுகன்: அவரைப்பற்றி உங்களுக்கு முழுதும் தெரியாது. இங்கு எங்களுக்கு நன்றாகத் தெரியும். முழுதும் எழுதயில்லை. அவரது கட்டுரைக்கொரு சிறிய பதில். அவ்வளவுதான்.
காலக்குறி கான் பதில்: நான் உங்களுக்கு விரிவாகப் பதில் போடுறேன். அடுத்த காலக்குறி வாறதுக்கு இன்னும் இரண்டுமாதமிருக்கு.

? சுகன்: இல்லை. என்க்குத்தேவை. காலக்குறியில் அடுத்த இஸ்ஸஜுவில் வெளியிடுறீங்களா?
காலக்குறி கான் பதில்:ஆமா வெளியிடுறம்.

பின்னர் மீண்டும் 19.07 நிமிடத்திற்கு

? சுகன்: கடிதம் போடுவதாயிருந்தால் ஒண்டும் வெட்டாமல் போடுவீங்களா?
காலக்குறி கான் பதில்: இல்லை. சிலவற்றை வெட்டவேணடி வரும்.

? சுகன்: இல்லை. ஒருசொல்லும் நீங்கள் வெட்டமுடியாது. கடிதத்தை முழுதும் போடுவதாயிருந்தால் போடுங்கள். இலலையெண்டால் கடிதத்தைப் போடவேண்டாம். நான் மீளப் பெற்றுக் கொள்கிறேன்.
காலக்குறி கான் பதில்: சரி திருப்பி அனுப்பி விடவா?

? சுகன்: இல்லை. அதனது போட்டோக் கொப்பி என்னிடம் உண்டு. மீண்டும் திட்டவட்டமாகச் சொல்லுங்க. உங்களை எனக்குத் தெரியாது. நாங்கள் கதைக்கும்போது முதலிலேயே கறாராகக் கதைக்க வேண்டும். ஒரு வரி வெட்டாமல கட்டுரையைப் போடுவீங்களா?
காலக்குறி கான் பதில்: இல்லை வெட்டித்தான் போடவேண்டும்.

? சுகன்:இல்லை. நான் கட்டுரையை மீளப் பெற்றுக்கொள்கிறேன்.

## உரையாடல் முற்றிற்று.

தட்டச்சு உதவி: ஞானி

www.tamilarangam.net